Registered No. M. 878.

ॐ

सत्यात् नास्ति परो धर्मः

பூர்ணசந்திரோதயம்.

சென்னை ராஜதாநியின் தென்பாகத்திலுள்ள
பிரஹ்மஞாநக் கிளைச்சங்கங்களின் மஹாசபையின்
ஆதரவின்மேல் மதுரையில் பிரசுரமாகி நடைபெறும்

மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தொகுதி 2. } 1911ஞூ செப்டம்பர்மீ 15௳
விரோதகிருதுஞூ ஆவணிமீ 31௳ } பகுதி 5.

ப. நாராயண அய்யர், B. A., B. L., F. T. S.
அ. ரங்கஸ்வாமி அய்யர், B. A., B. L., F. T. S. } பத்திராதிபர்.

வருஷ சந்தா ரூ 2. தனிப்பிரதி அணா 4.

மதுரை
விவேகபாநு அச்சியந்திரசாலையில்,
பதிப்பிக்கப்பெற்றது.

162

பொருளடக்கம்.

		பக்கம்
சுப்பிரமணியரும் அவருடைய உண்மையும்	சிவராமசுப்பிரமணியன்	௧௫௭
மனிதர் கடமை—து. வி. கோபாலசாமி நாயக்கர்		௧௬௪
சுமதிஎன்னும் உத்தமியின்சரித்திரம்—எஸ். சாமிநாதஅய்யர்		௧௭௩
வெள்ளியம்பலம் என்னும் ஞாநிகளின் சங்கமும் அதனின்று வெளிவரும் ஆசாரிய புருஷர்களும்	ப. நா.	௧௭௮
விஷ்ணுதிரம்—ஆர். எஸ். நாராயணஸ்வாமி அய்யர்		௧௮௭
புத்தக வரவு—பத்திராதிபர்		௧௯௧
சமாசாரம்	ஷை	௧௯௨
பதஞ்சலிமகரிஷி அருளிச்செய்த யோகசூத்திரம்.		

The Oriental Prognostic Observatory.

Corresponding Director: **V. V. Ramanan.**
F. Z. S. (LOND.) O.M.D.S.F.V. (BERLIN).
M.O.S.M.F. (PARIS): ETC.

Charges very moderate for the work turned out !

We do not for a moment deny that there are plenty of impostors who in the name of astrology are making false predictions and thus bringing a noble science into ill-deserved contempt. But our predictions are guaranteed and based on the most reliable canons of all the systems Asiatic and European. Struck by our abilities in interpreting planetary influence, that NESTOR of "MODERN ASTROLOGY" in the West, Mr. ALAN-LEO writes to us "Just give us the cream of your system and MAKE YOUR NAME FAMOUS IN THE WEST."

Apply with birth-date, and an initial fee of Rs. 6 stating requirements to the undersigned:—

1, SAMI PILLAI ST.,
Chulai, Madras, N.C.

V. V. Ramanan,
Corresponding Director.

ॐ

सत्यात् नास्ति परो धर्मः

பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 2. { 1911ளு செப்டம்பர்மீ 15உ / விரோதகிருதுளு ஆவணிமீ 31உ } பகுதி 5.

சுப்பிரமணியரும் அவருடைய உண்மையும்.

1. சுப்பிரமணியர் என்றும், ஷண்முகர் என்றும், ஆறுமுகர் என்றும், கார்த்திகேயர் என்றும், குகன் என்றும்,குமரர் என்றும், இம்மூர்த்தியின் பெயர்கள் வழங்குகின்றன. இவரைப்பற்றிய ஒரு ஸஹஸ்ரநாமாவளியும் உண்டு. இவரைப்பற்றி ஸ்காந்தம் என்று பெயருள்ள ஒரு விஸ்தாரமான புராணமும் உண்டு. இவர் பரமேசுவரனின் இரண்டாம் குமாரர். மூத்தவர் கணபதிக்கடவுள். இவர் சூரபத்மாசுரன் என்னும் கொடிய அசுரனைப் பல போர்கள் செய்து கடைமுறையில் வென்றார் என்பது பிரஸித்தமான புராண வரலாறு. இஃதை அடியில்வரும் திருமந்திரத்தில் குறிப்பித்திருக்கிறது.

எம்பெருமானிறை வாமுறை யோவென்று
வம்பவிழ் வானோ ரசுரன் வலிசொல்ல
வம்பவள மேனி யறுமுகன் போயவர்
தம்பகை கொல்லென்ற தற்பரன் றானே.—திருமந்திரம்.

இது சுப்பிரமணிய ஆலயங்கள் எல்லாவற்றிலும், ஒரு பிரபல உத்ஸவமாகக் கொண்டாடப்பெறுகிறது. ஸம்ஸ்கிருதபாஷையில் கவிசிரேஷ்டனான காளிதாஸன் என்பார் இத்தேவருடைய உற்பத்தியை

ப்பற்றி குமாரஸம்பவம் என்ற கேர்த்தியான காவியம் ஒன்று எழுதியுள்ளார். கணபதியின் உபாஸனையும் ஆராதனையும் எவ்விதம் நம் தேசமுழுமையும் பரவியிருக்கின்றதோ, அவ்விதமே, சுப்பிரமணியக்கடவுளின் ஆராதனையும் உபாஸனையும் பரவியிருக்கின்றது. இவருக்கு அநேக பிரபலமான ஆலயங்கள் உள்ளன. முக்கியமாக தென் இந்தியாவில் அநேக க்ஷேத்திரங்கள் இருக்கின்றன. திருப்பரங்குன்றம், மதுரை (கூடல்குமரர்), திருச்சீரலைவாய் என்கின்ற திருச்செந்தூர், திருவாவினன்குடி என்கின்ற பழனி, குன்றக்குடி, திருவேரகம், என்கின்ற சுவாமிமலை, திருப்போரூர், திருத்தணிகை, மயிலம், கொல்லிமலை, பொதியமலை, கழுகுமலை, திருக்கோணமலை, கதிர்காமம், இத்தலங்கள் முக்கியமானவைகள்.* அவர் ஒவ்வொரு குன்றுதோறும் இருக்கிறார் என்பது ஞானிகளின் கொள்கை. அப்படியிருப்பதை குன்றுதோறாடல் என்று சொல்லுகிறது. எந்தச் சிவாலயத்துக்கும் கணபதி, சுப்பிரமணியர் என்ற பரிவார தேவதைகள் இன்றியமையாதவர்கள். இவருடைய மஹிமையைப்பற்றி அருணகிரிநாதர் என்ற ஞானியார் திருப்புகழ், திருவகுப்பு, கந்தர் அந்தாதி முதலிய பிரஸித்திபெற்ற அருமையான பாசுரங்கள் அடங்கிய பிரபந்தங்களை அருளியிருக்கின்றார். இவைகளின்கண் தமிழ்ப்பாஷையின் சிறப்பும், வலிமையும், வளமையும் விஸ்தாரமாக மனம் மகிழக் காணலாம்.

2. ஸ்ரீ சுப்பிரமணியரின் உண்மையைப்பற்றி பலவாறான விஷயங்கள் உள்ளன. அவைகள் அடியில் வருமாறு. தேகம் தேவாலயமாகப் பிரதிகப்படுத்தப் பெற்றிருக்கின்றது என்பதை அறிவுள்ளார் யாவரும் அறிந்தவிஷயம். இதை "உள்ளம் பெருங்கோவில், ஊன் உடம்பு சிவாலயம்" என்ற திருமந்திரத்தால் காண்க. சரீரத்தின்கண் ஆறு ஆதாரங்கள் இருக்கின்றன. இவைகள் சக்கரங்கள் எனப்படும்.

* டிஸ்டிரிக்ட்டு முன்சிபு ஸ்ரீமாந். சுப்பிரமணியபிள்ளை அவர்கள் பிரசித்தஞ்செய்திருக்கின்ற "திருப்புகழின்" முகவுரையில் 40 சுப்பிரமணிய ஸ்தலங்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன.

ஆதாரங்கள்.	இதனுள்ள தாமரையின் இதழ்கள்	அக்ஷரம்.	தேவர்.	சக்தி.
(1) மூலாதாரம்.	4	ஓம்—ச	கணபதி	குண்டலினீ
(2) ஸ்வாதிஷ்டானம்.	6	ந—ர	பிரஹ்மா	ஸரஸ்வதீ
(3) மணிபூரகம்.	10	ம—வ	விஷ்ணு	லக்ஷ்மீ
(4) அநாஹதம்.	12	சி—ண	உருத்திரர்	உமை
(5) விசுத்தி.	16	வ—ப	மகேசர்	மஹேசுவரீ
(6) ஆஞ்ஞை.	3	ய—வ	சதாசிவன்	மனோன்மனி*

இந்த 51 இதழ்களே, அக்ஷரங்களாக வடமொழி நெடுங்கணக்கில் அமைகின்றன. இந்த 51 இதழ்களின் முடிவில் சுத்தசிவம் இருக்கின்றது என்பது சைவஸித்தாந்தத்தின் அபிப்பிராயம். இதற்கு ஆதாரம் அடியில்வரும் பாசுரங்களாம்:—

"ஒன்பது வாசலும் ஒக்க அடைத்தால்
ஆனபதில் ஒன்றும் அரன்" —ஔவைகுறள்.

நாலும் இருமூன்றும் ஈரைந்தும் ஈராறும்
கோவில் நின்ற குறிகள் பதினாறும்
மூபங்கண்டு ஆங்கே முடிந்து, முதலிரண்டும்
காலங்கண்டான் அடி காணலுமாமே. —திருமந்திரம்.

நாலு, இருமூன்று, முதலியன ஒவ்வோர் ஆதாரத்தின் கண்ணுள்ள இதழ்களைக் குறிக்கின்றன. மேற்கண்ட ஆறு ஆதாரங்களுக்கும் ஆறு சக்திகள் உள்ளன. அவ்வாறு சக்திகளே ஒரே ஸ்வரூபமாகி, ஆறுமுகம், ஷண்முகம் என்று பெயரடைந்து சுப்பிரமணியராயின.

பிரஹ்மரந்திரத்தின்கண் இருக்கின்ற பஞ்சமுகமுள்ள சுத்தசிவத்தின் விவரமாவது:—

---

* ஸ்ரீமான் சுந்தரமுதலியாரின் "அண்டபிண்ட வமத்துவ விளக்கம்" என்ற புத்தகத்தைப் பார்க்க. இவ்வட்டவணையிற் சொல்லியிருக்கும் தாமரை இதழ்களின் உண்மையைப்பற்றி, இப்பத்திரிகை முதலாம் தொகுதி 121–326 பக்கங்களைப்பார்க்க.

ஈசானம் 1
ஸத்யோஜாதம் 2
வாமதேவம் 3
அகோரம் 4
தத்புருஷம் 5

ஈசுவரன் சிருஷ்டி கிருத்தியத்தில், ஆறு ஆதாரங்களிலுள்ள சக்திகள்சேர்ந்து ஒருதலையாக இக்கடவுளாக (சுப்பிரமணியராக) மூர்த்திகரித்து ஏற்பட்டார்.

3. கணபதி, சுப்பிரமணியர், இவர்களைத் தரிசனம் செய்து வரம் பெற்றதின்மீது, சிவதரிசனம் கைகூடுமாகையால் 'தந்தைமுன்னவன்' என்ற பெயர் ஷண்முகனுக்கு முக்கியமாய் ஏற்பட்டது. இவ்வாறு ஆதாரத்தையும் யோகமுறைப்படி கடந்ததின்மீதுதான், பேரூர் (சிரசில்) உறையும் பெருமானைக் காணலாம். ஆத்மவிஷயமே ஆலயங்களில் பிரதிகப்படுத்தப்பெற்றிருக்கின்றது. ஆலயங்களின் பிரயோஜனம் மநப்பழக்கம் ஏற்படவே அன்றி வேறல்ல.

"காயக்குழப்பனை காயநன் னாடனை
காலத்தினுள்ளே கமழ்கின்ற நந்தியைத்
தேவத்துளே எங்கும் தேடித்திரிவார்கள்
காயத்துள் நின்ற கருத்தறியாரே." —திருமந்திரம்.

4. சுப்பிரமணியர், சூரபத்மாசுரனை வென்று, அவனை மயில் வாஹநமாக ஏற்படுத்திக்கொண்டது, யோகியானவன், உலகப்பற்றுக்களையெல்லாம் ஜயித்து, அவைகளைக் கீழ்ப்படுத்தி ஜீவன்முக்தனாக நடைபெறுகிறான் என்பதை உணர்த்துகின்றது.

5. சுப்பிரமணியர் என்ற பதத்திற்கு அழகாயுள்ள பிரஹ்மன் என்பது பொருளாம். புராண வரலாறு இதுவாம் :—

ஈசுவரனது நெற்றிக்கண்ணினின்று வீழ்ந்த ஆறு அக்கினிப் பொறிகளை அக்கினிபகவான் ஏற்றுக்கொண்டு சரவணப் பொய்கை

யில்விட அப்பொறிகள் ஆறு பிள்ளைகளாயின. அவைகளை அக்கி நிக்கடவுளுக்கு சுகிர்தமான ஆறு கார்த்திகைக் கன்னிமார்கள் வளர்த்தார்கள். பின்னர் உமை அப்பிள்ளைகளைக் கட்டி உச்சிமுகர்ந்து பார்க்கும் காலத்தில், ஆறு தலைகளும், ஒரு உடலும், 12 கைகளும், இரண்டு பாதங்களும் உள்ள ஒரு மூர்த்தியாக ஏற்பட்டது.

கங்கைநதியில் அப்பொறிகள் விடப்பட்டனவென்றும், அவைகள் சரவணம் வளர்ந்த இடம் ஓரமாக ஒதுங்கினவென்றும், பின்பு குழந்தைகளாகக் கருத்தரித்து உண்டாயினவென்றும் வேறொரு புராண வரலாறு.

சரவணம்=ஹிருதயகமலம், ச=மூலாதாரம், ர=ஸ்வாதிஷ்டாநம், வ=மணிபூரகம், ண=அநாஹதம். குகன் என்றால் ஹிருதய குகையில் இருப்பவன்

ஆமே பிரான்முகம் ஐந்தொடு ஆருயிர்
ஆமே பிரானுக்கு அதோ முகமாறுள து
ஆமே பிரானுக்கும் தன்சிர மாலைக்கு
காமே பிரானுக்கு நரர் இயல்பாமே. —திருமந்திரம்.

பரமசிவனுக்கு உள்ள ஐந்துமுகமும், கண்டத்தில் உள்ள அதோமுகமும், சேர்ந்து சுப்பிரமணியரானார். அதாவது ஜீவாத்மா ஆனார்; நரர் இயல்பின் பிரதிகமாக ஆனார். ஜீவாத்மா பரமாத்மாவின் குழந்தை. கண்டத்தில், ஜீவாத்மா அதிதேவதை என்பது யோகசாஸ்திரத்தின் துணிபு. பல சரீரங்கள் எடுத்து விருத்தியடைந்து, விகாரம்பெற்று உலகத்தில் பலவித விஷய நுகர்ச்சிகள் அநுபவிக்க, அவைகளால் காமனைகள் விருத்தியடைந்தன. சூரன் என்ற அசுரன் இக்காமனைகளின் பிரதிகம். பின்பு ஜீவன் யோக முறைபற்றி பல ஆதாரங்கள் என்ற படியேறிக் குகைக்குள் உறைந்து, அதில் அநேக காலம் வசித்து, உருத்திரமூர்த்தியின் அநுக்கிரஹம்பெற்று, காமனைகளை ஜயித்தார். இக்காமனைகள் பல ஸ்வரூபங்கள் உள்ளனவென்பதைச் சூசிப்பிக்க, சூரபத்மாசுரன் பல ரூபங்கள் எடுத்து எடுத்து, ஜீவனான சுப்பிரமணியருடன் போர்புரிகின்றான். கடையில் மயில்ரூபம் எடுத்துக்கொள்ளுகிறான். அதைக் கொல்லாமல் அதன்மேல் ஒட்டியும் ஒட்டாமலுமாய்ச்சுப்பிரமணியர்

இருக்கின்றார். அதாவது ஞானியானவன் அக்காமனைகளை முற்றும் அழிக்காமல் அவைகளை வசப்படுத்திக் கொண்டு ஜீவன் முக்தனாக உலகில் ஜனங்களின் அநுக்கிரஹார்த்தமாகச் சஞ்சரிக்கிறான். இவரே ஞானபண்டிதன். ஞானத்திற்கு இடையூறுகளான அரிஷட்வர்க்கங்களைத் தொலைக்கும் மருந்தைக் கொடுக்கின்ற பரமபுருஷன். வல்லபை என்பாள் சூரனின் சகோதரி. அவளே குண்டலினீசக்தி. அவளால் பல அசுரர்கள் உண்டாகின்றார்கள். அவர்களை முற்றும் ஹதம்பண்ணச் சுப்பிரமணியரால் கூடவில்லை. பின்பு யோசித்தார். முதலில் பிரணவ உபாஸனை செய்யவில்லை என்று அறிந்து, அதன்மேல் நாமரூப பிரபஞ்சத்தின் பீஜத்தின் பிரதீகமான பிரணவம், அதன் பொருளான கணபதியை, ஆராதனைசெய்து, பலவித சங்கற்பங்களான இவ்வசுரர்களை வென்று வேரோடுகளைந்து எறிந்து மநச்சாந்தம் பெற்றார்.

6. இவர்க்கு குமரர் என்ற பெயருண்டு என முன்னமேயே தெரிவித்திருக்கிறோம். சநத் குமாரர் நால்வர். சுக்கிரன் என்ற கிரகத்தினின்று, பூமியில் மனிதனின் மூன்றாம் வர்க்கத்தினரான தாநவர்கள் நடைபெறுங்காலத்தில், அப்போது ஆண் பெண் என்ற விவஸ்தை ஏற்படாமல் இருந்த சமயத்தில், அதாவது, கிருதயுக அந்தியத்திலும்திரேதாயுகத்திலும்,இற்றைக்குச் சுமார்ஒருகோடியே அறுபதுலக்ஷம் வருஷங்களுக்கு முன்னர், கம்பீரமான ஞானநாகங்கள் என்று பெயர்பெற்ற மஹாபுருஷர்கள் கிரியாசக்தியால் யோக சரீரங்களை எடுத்துக்கொண்டு, ஒரு கம்பீரமான ஞானக்குழாமாக பூமிக்கு வந்தார்கள். அக்குழாத்தில் நால்வர் முக்கியஸ்தர். அவர்களே, சநத்குமாரர் எனப் பெயர்பெறுவார். அவர்களில் தலைமைபெற்றவர் மூலாதாரப் பொருள் (Root base of occult Hierarchy) என்றும், எங்கும் பரவும் ஆலவிருக்ஷம் என்றும், பரமத்தீக்ஷாகுரு வென்றும், வழங்கப்பெறுவர். இவரே நம் குமரக் கடவுள் ஆவர். அவருக்கு ஞானஜோதிஸ் என்றும் பெயருண்டு. சாந்தோக்கிய உபநிஷத்தில் vii-26 இவரைப்பற்றி அடியில் வருமாறு.

" அந்நம் சுத்தமாயிருந்தால், மநத்தில் ஸத்வபாகம் ஏற்படும். மநம், புத்தி, விஞ்ஞானம், சூக்ஷ்ம, காரண சரீரங்கள், சுத்தமாக ஏற்படில், முன்

ஜன்மாந்தரங்களின் ஸ்மரணை தெளிவுபெறும். முடிவில்லாத முன் ஜன்மங்களின் ஸ்மரணையையும், இனி வருங்காலத்தின் அறிவையும் பெற்றால், ஹிருதய கிரந்திகள் அறுபடும்; காமனைகள் அற்றுப்போம். பற்றற்றவனாவான். பரமாத்மாவின் ஸ்பரிசத்தால் இது நேரிடும். அத்தன்மையான நிலைமைபெற்ற புண்ணியனுக்கு மஹாகுருவான பகவான் சநத்குமாரர் தமஸுக்கு அப்பால் உள்ள பரன்ஜோதிஸை வெளியிடுவர். சுக்கிரனிடமிருந்து இறங்கின ஸ்கந்தர் இவராவர். தாரகாஸுரனை ஹதம்பண்ணின பரமசிவனினின்று உண்டானவர். தாரகாசுரனே மனிதனை ஞானமுறையில் மேற்போகாமல் தடுக்கின்றவன். ஸ்கந்தர் தாரக மந்திரத்தை உபதேசம் செய்பவர்.

7. இவரைப்பற்றி அடியில்வரும் விவரம் ஞானவாசிஷ்டத்தில் உள்ளது:—

பரப்பிரஹ்மத்தின் எல்லையில்லாத அகண்டமான பிரதேசத்தில் பிரகிருத சிருஷ்டி கர்த்தாவான பிரஹ்மாவானவர், சமுத்திரத்தில் அலையுண்டாவதுபோல, சுயேச்சையாக, சுயம்புவாக உண்டாயினார்.எல்லாச் சலனங்களுக்கும் ஆதாரமான மையமாக ஏற்பட்டார். பெரியோர் கட்டளைகளை ஆக்ஷேபிக்காமல் முதன்மையில் ஜனங்கள் நடைபெற்றார்கள். பின்பு அவ்வொழுக்கம் குறைந்தது, நான் என்ற அகங்காரம் மேலிட்டது. ஜனஸமூகத்தில் குழப்பம் உண்டாயிற்று. இது பாலன் யௌவந பர்வத்தை அடையும் காலத்தில் நிகழ்வது போன்றது. பின்பு பிரஹ்மா இந்நிலையை முன்பின் ஆலோசித்தார். என்னை (வசிஷ்டரை) சிருஷ்டித்தார். எல்லா ஞாந விஷயங்களையும் எனக்குக் கற்பித்தார். பூமிக்குப்போய் அறிவிலிகளான மனிதவர்க்கத்தினர்க்கு ஞானஉபதேசம் செய்யவும்,அவர்களுக்கு நல்வழி காட்டவும்,என்னை அனுப்பினார். என்னைப்போல அநேக ஞானிகளையும் அவர் அனுப்பினார். அவர்களில் நாரதர் முதலியவர்கள் முக்கியமானவர்கள். நாங்கள் எல்லோரும் சநந் குமாரர் என்பவரின் தலைமைக்குட்பட்டு இவ்வுலகுக்கு வந்தோம். இவ்வுலகில் அந்த ஞானிகள், அறிவில்லாது மதிமயங்கிய பலவிடங்களிலுள்ள ஜனங்களை நல்வழிப்படுத்தவும், தர்ம முறைகளையும் நீதி நெறிகளையும் கற்பிக்கவும், மனிதர்களும் தேவர்களும் ஒருவரோடொருவர் ஆதரவாயிருக்க யக்ஞாதிகளைக் கற்றுக்கொடுக்கவும், ராஜாக்களை நியமித்தார்கள். தர்மார்த்தகாமம் என்ற பிரகிருதி சம்பந்தமான மூன்றுவித புருஷார்த்தங்களை அடையும்படியாக தர்ம சாஸ்திர முறைகளை ஏற்பாடு செய்தார்கள்.

இவரே உலகத்தில் உள்ள ஸ்தாவர ஜங்கமங்களான யாவற்றையும் விகாசமுறையில் நடத்திவருகின்றார். இவரே வெள்ளி அம்பலம் என்ற சித்தர்களின் மஹாசபையை ஆதியில் ஸ்தாபித்தவர். இவரே அதன் உயிராக இருப்பவர்.*

8. சுப்ரஹ்மண்யருக்கு, பால்யாவஸ்தையில், குழந்தையாக விளையாடும் பருவத்தில், முருகக் கடவுளென்ற பெயருண்டு. இதுபற்றிய பிள்ளைத்தமிழ்கள் என்றபிரபந்தங்கள் தமிழ் நாட்டில் ஏராளமானவை. அம்மூர்த்தியாக உபாஸனையும் ஆராதநமும் முக்கியமாய்த் தென்னிந்தியாவில், ஆரியருடைய சம்பந்தம்ஏற்படுவதற்கு முன்னரே, இருந்திருக்கிறதாகச் சிலரபிப்பிராயம். அது சரியாயிருக்கலாமென்று தோன்றுகிறது. ஏனென்றால், ஆரியர்கள் தென்னிந்தியாவில் முதல் முதல் பிரவேசித்தது சுமார் 20,000 ஆண்டுகளுக்கு முன்னரெனத் தெரியவருகிறது.† அதற்கு அவ்வாரியர்களுக்கு முன்பு திராவிடர்கள் தென்னிந்தியாவில் குடியேறி இருந்து நாகரீகம் பெற்றிருந்தார்கள். திராவிடர்களோ, அட்லாண்டிக் ஜாதியாரின் இரண்டாம் வகுப்பினரான தையித்தியர், லெமூரியரான தாநவர்களுடன்விவாகசம்பந்தம் பெற்று,அச்சம்பந்தத்தின் வழியில், திராவிடர்கள் உண்டானார்கள். அட்லாண்டிக் ஜாதியார் உலகில் தோன்றும் முன்னரே, சநத்குமாரர்கள் உலகில் தோன்றினார்கள். அதனால், இச்சநத் குமாரர்களில் சிரேஷ்டரான ஸ்கந்தரைப் பற்றிய பூஜையும், ஆராதனையும் திராவிட உலகத்தில், ஆரியர் வருமுன்னரே, ஏற்பட்டிருக்கலாமெனத் தோன்றுகிறது.

9. சுப்பிரமணியர் என்பது இனி உலகத்தில் ஜநிக்கப்போகின்ற, புத்தி தத்துவம்பெற்ற, 6-ம் மனிதவர்க்கத்தினரைச் குறிப்

---

*(குறிப்பு: இதிற்கண்ட விஷயங்கள், Babu Bhagavandoss's Science of Social Organisation என்ற புத்தகத்தினின்றும், Sir S. Subramania Aiyer's the Great White Brotherhood என்ற புத்தகத்தைத் தழுவியும் எழுதப்பட்டுள்ளன)

† (Note:— Vide Vol. 31, Theosophist P. 1073, 1074.)

பிக்கிறதாக எண்ணலாம். கணபதிதத்துவம்* எவ்விதம் 5-ம் தத்துவமாகிய மநத்தின் விகாஸத்தைத் தெரிவிக்கின்றதோ, அவ்விதம், சுப்பிரமணியர் என்ற பிரதிகம் 6-ம தத்துவமாகிய புத்தியின் பூர்ணவிகாஸ நிலையைத் தெரிவிக்கின்றது. புத்தி தத்துவத்தின் லக்ஷணமாவது, வேற்றுமைப்படுத்தும் தன்மை நீங்கி, ஒருமைப்படுத்தும் தன்மை மேலாக மலரும் நிலைமையாம். அப்போது, மனிதனுக்கு எல்லாவஸ்துக்களைத் தன்னிலும், தன்னைஎல்லா வஸ்துக்களிலும் பார்க்கும்தகைமை ஏற்படும். ஈசோபநிஷத்மந்திரங்களில் †சொல்லியிருக்கும் உயர்நலம் அமைந்த நிலைமையைப் பெறுவான். இப்போது நாம் வழிபடும்சுப்பிரமணியக்கடவுள், இனிவரப்போகும் ஆறும் மனிதவர்க்கத்தின் (6th root race) அடையாளமாக லக்ஷியிக்கப்படத்தக்கவர். இனி ஜநிக்கப்போகும் ஆறும்மனிதவர்க்கத்தின ஆத்மபராளாய், ஆத்ம ஸந்துஷ்டாளாய், மெய்யுணர்வு பெற்றவர்களாய் இருப்பவராவர்.

ஓம் தத் ஸத்.

சிவராமசுப்பிரமணியன்.

நன்மொழி.

---

107. வைராக்கியமென்பது, ராகமின்மை, பற்றற்றநிலைமை, இம்மையிலும் மறுமையிலும், போகநுகர்ச்சியில்ஆசைப்படாதிருத்தல், விஷயங்களில் விருப்பும், வெறுப்பும், இல்லாமல் இருத்தல். வேண்டுதல் வேண்டாமை இல்லாமல் இருக்கும் மநோநிலை. இஃது உண்மை வைராக்கியம், போலி வைராக்கியம் என இருவகைத்தாம். போலி வைராக்கியம், யாதேனும் உலக சங்கடங்கள் உன் மநத்தை வசப்படுத்துங்கால், உண்டாகும். அப்போதைக்கப்போது இவ்விதம் வைராக்கியம் ஏற்பட ஆராய்ச்சியும் நிகழ்ந்தால், கடைமுறையில் உண்மையான வைராக்கியம் உண்டாகும். அதனால் நம்மநம் நேர்மை பெறும், சாந்தமடையும்.

---

*இப்பத்திரிகையின் முதலாம் தொகுதி 22-ம் பக்கத்தில் "கணபதியும் அவருடைய உண்மையும்" என்பதைப்பற்றிய விஷயத்தைப் பார்க்க.

† ஈசோபநிஷத்தின் 6-7 மந்திரங்களைப் பார்க்க.

172

மனிதர் கடமை.

1. ஸர்வேச்வரன், வேதங்களாலும் முநிசிரேஷ்டர்களாலும் நாயன்மார்களாலும் ஆழ்வார்களாலும் கொண்டாடப்பெற்ற ஏற்ற முடைய அந்தமில் பேரின்பவீடாகிய பரமபதத்தில் இரத்நமய மான திருமாமணி மண்டபநடுவில் சீரிய அரியாசனத்தில் "அகலகில் லேனிறையுமென்றலர் மேல்மங்கையுறைமார்பா" என்றபடி "உடன மர்காதன்மகளிர், மணமகள் ஆயர்மடமகள்" என்கிற முப்பிராட்டி மார்களோடும் உபயவிபூதிக்கும் நிர்வாககனாய் எழுந்தருளியிருந்து, தானும், நிரதிசய ஆநந்த பூரிதனாய், அநந்த கருட விஷ்வக்சேநர் முதலான நித்யஸூரிகளையும், முக்தர்களையும், ஆநந்திப்பித்துக்கொ ண்டிருக்கவும்; இவர்களைப்போலவே பெத்தாத்மாக்களும், தன்னை அநுபவித்து நித்யநிரதிசய ஆநந்தமாகிய மகாசம்பத்தைப்பெற்று வாழுகைக்குப் பிராப்தியுண்டாயிருக்க, இவர்கள் அவ்வாழ்வைப் பெறுகைக்குத் தேடிக்கொள்ளவேண்டிய ஞாநம், பக்தி, வைராக்யா திகளை எள்ளளவேனுங்கொள்ளாமல், அவைகள்கொள்ளுகைக்குறுப் பான அவயவாதிகளும் இன்றியே, அடியறியப்போகாத அநாதி யாகிய மூலப்பிரகிருதியில் மூர்ச்சித்துறங்கி உருமாய்ந்து கிடக்கும் ஜீவகோடிகளைக்கடாக்ஷித்துத் தனியரைப்போல் நொந்து "பல்லுயி ர்க்கும் யாக்கை கொடுத்தளித்தகோனே" என்றபடி பல்லுயிர்களுக் கும் அதனதன் அநாதிகன்மத்துக்கொத்தபடி பல்வேறுசரீரங்களைப் பல்பிறவியிலும் தந்தருளுகிறான் என்பது நூற்றுணிபு.

2. இங்ஙனமாகவே அநுபவத்திலும், ஒரு வித்தினுள் உரு மாய்ந்து கண்ணுக்கு விஷயமாகாது அடக்கியுறங்கிக் கிடந்த ஒரு ஜீவசக்தியானது மண்ணீர் முதலிய சேர்க்கையால் முன்னொருநாளும் காணப்படாதிருந்த முளைதோன்றிச் செடிகொடி, அல்லது மரமாகி, அதனிடத்து மொட்டுவிட்டுப்பிறகு மலராய்க் காயாய்க் கனியாய்ப் படிப்படியாக வித்தாய் விருத்தியாகி அடங்குவதுபோல, மூலப்பிர கிருதியில் உருமாய்ந்து கிடந்த ஜீவாத்மாக்களும் மேற்கண்டவாறு அதனதன் கன்மாநுசாரப்படி படிப்படியாக,

"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்

கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்ல சுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா அநின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்து" என்றும்

"மொய்த்த வெந்தீவினையால் பல்லுடல்
தொறும் மூத்து" என்றும்

சொல்லுகிறபடி எண்ணில்லாத பல்பிறவியினும் "மாறி மாறிப்பல் பிறப்பும் பிறந்தும் செத்தும்" என்றபடி எண்பத்துநான்குலக்ஷம் யோநி பேதங்கள் ஒவ்வொன்றிலும், பல்லுடல் கொண்டு பிறந்து, இறந்து, புண்ணிய மேலீட்டினால், ஈற்றில் கடலைக் கையால் நீந்திக் கரைகண்டான் கதைபோல இம்மனிதப் பிறவியில், கூன் குருடு செவிடு முதலிய உடற்குறையின்றிப் பிறக்கப்பெற்றது, அரிதினும் அரிதாகும், இந்தமானிடப்பிறவி. இதுபற்றியே.

"அண்டசஞ் சுவேதசங்கள் உற்பீசம் சராயுசத்தோ
டெண்டருநா லெண்பத்து நான்குநூ றாயிரந்தான்
உண்டு பல் யோநிதோறும் ஒழிந்துமானிட துதித்தல்
கண்டிடிற், கடலைக்கையால் நீந்தினன் காரியங்காண்"
எனச் சித்தியாரும்,

எண்ணிரிய பிறவிதனின் மானிடப்பிறவிதான்
யாதினு மரிதரிதுகாண்" எனத் தாயுமானரும்,
"அரிதரிது மானிடராதலரிது மானிடராயினும்
கூன்குருடு செவிடுபேடு நீக்கிப்பிறத்தலரிது"
என ஞாந வள்ளலாரும்

கூறியவை காண்க.

3. இனி மேற்கூறியவாறு, ஈசுவரனுடைய பரமகாருண்யத்தால் தந்தருளப்பெற்ற "ஊர்வன நடப்பன பறப்பன செயற்கொண்டிருப்பன முதற்றேகங்களைத்தனையும், உடைய ஜீவவர்க்கங்கள் யாவும், ஆகாரம், நித்திரை, விருப்பு, வெறுப்பு, இன்பதுன்பம், முதலானவைகளில், மனிதனோடு சமமாகவிருந்தாலும், மானம் அவமானம் நன்மைதிமை என்பனவைகளைப் பகுத்தறியும் அறிவினாலும், சுகதுக்க

ங்களை அநுபவிக்கும் முறைமையினாலும், தொழிலினாலும், மற்றஜீவவர்க்கங்களைவிட மனிதன் வேறுபாடுடையவனாயிருக்கிறான்; அன்றியும் கடவுளால் பொதுவாக எல்லா ஜீவவர்க்கங்களுக்கும் இயல்பாகவே தந்தருளப்பெற்ற இயற்கையறிவைக்கல்வி கேள்விகளினாலும், சத்சகவாசத்தினாலும், கூடிய செயற்கையறிவால் விருத்திசெய்து கொள்ளும் சக்தியும் மனிதனுக்குண்டு; இன்னும் கண்ணுக்குக்காணக்கூடாதவைகளையும், செவிக்குக் கேட்டறியக்கூடாதவைகளையும் ஊகித்தறியும் பேரறிவும் மனிதனுக்குண்டு. ஆகவே மனிதன் இயற்கையறிவோடு செயற்கையறிவையுங்கொண்டு நன்மைதீமைகளையும், அவைகளின்பலனாகிய புண்ணிய பாவங்களையும், பகுத்தறிந்து வேண்டிய முயற்சிசெய்து இம்மைப்பயனை அநுபவிப்பதுமன்றி மறுமையில் "வாக்காய் மநத்தாய் மநவாக்கிறந்தவர்பால் தாக்காதே தாக்குந்தனி" என்றபடி மநவாக்குக்கெட்டாத தனி முதலாகிய பரமாத்மாவையும் அறிந்து, நித்யநிரதிசயாநந்தத்தை அடைதற்குரியவனுமாகிறான். ஆதலால் இம்மைப்பயன் ஒன்றையே அடைதற்குரிய பசுபக்ஷிமுதலிய மற்றஜீவவர்க்கங்களைவிட, மறுமையும் பெறுதற்குரிய மனிதனே மேற்பட்டவனென்பது தெற்றெனவிளங்கும்.

4. இத்தகைய மேம்பாட்டினையுடைய மனிதப்பிறவியை அடைந்தும் "மின்னின் நிலையிலமென்னுயிராக்கைகள்" என்றும் "மின்னனைய பொய்யுடல்" என்றும் கூறியபடி, சரீரம் நிலையற்றதாயும், இருமையுமடையும் பெருமைபெற்ற பேரறிவுடைய "இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ ஏது வருமோ அறிகிலேன்" என்றபடி, இம்மனிதப்பிறவி அல்லாத இனி எந்த தாழ்ந்தபிறவி கிடைக்குமோ அதையும் அறியக்கூடாமையும், இருக்கின்றமையால், இம்மனிதசரீரம் உள்ளபோதே நிலையில்லாத இம்மைப்பயன்ஒன்றையே கருதி வீணே வாணாள் கழிக்காது,

"எடுத்த தேகம் இறக்குமு னேயெனைக்
கொடுத்து நின்னையுங் கூடவுங் காண்பனோ.
அடுத்த பேரறி வாயறி யாமையைக்
கெடுத்த வின்பக் கிளர்மணிக் குன்றமே" .. என்றும்

"பொய்திகழ் முலகநடையென் சொல்கேனென்
சொல்கேன் பொழுதுபோக்கே தென்னிலோ
பொய்யுட னிமித்தம் புசிப்புக் கலைந்திடல்
புசித்தபின் கண்ணுறங்கல்
கைதவம லாமலிது செய்தவ மதல்லவே
கண்கெட்டபேர்க்கும் வெளியாய்க்
கண்டதிது விண்டதைக் கண்டித்து நிற்றவெக்
காலமோ வதையறிகிலேன்" என்றும்

ஸ்ரீ தாயுமானுர் மனமிளகிமுறையிட்டுக் கொண்டபடி, எடுத்ததேகம் இறக்குமுன்னே இவ்வுலகவாழ்க்கைக்குழைப்பதுபோலவே, பரவாழ்வுக்குரிய சாதநங்களைச்செய்து, இம்மனித யாக்கையாலாய பயனை எய்தநினையாதிருக்கும் நமதறியாமையை என்னென்றுகூறுவது?

"இன்றுசாதல் நின்றுசாதல் அன்றியாரும் வையகத்து
ஒன்றிநின்று வாழ்தலின்மை கண்டுநீசர் என்கொலோ
அன்றுபா ரளந்தபாத போதையுன்னி வானின்மேல்
சென்றுசென்று தேவரா யிருக்கிலாவ வண்ணமே"

எனத்திருமழிசைப்பிரானும்.

"நீரிற்குமிழி இளமை, நிறைசெல்வம்
நீரிற்சுருட்டு நெடுந்திரைகள்—நீரில்
எழுத்தாக்கும் யாக்கை, நமரங்கா ளென்னே
வழுத்தாத தெம்பிரான்மன்று"

என வையோரும் கூறும் திருவாக்குகளையும் இங்கு கவனிக்கத் தக்கது.

5. ஆகவே நமது வாழ்நாள்களில் ஒருநிமிஷங்கூட வீழ்நாள் கழிக்காமல்,இகவாழ்வுக்குழைப்பதில் விசேஷமாகச்செலுத்தும் ஊக்கத்தைப் பரவாழ்வுக்குழைப்பதிலும் பங்கிட்டுக்கொண்டு,அவ்வுழைப்பிற்குரிய முக்ய சாதநங்களாக தன்னைப்போலவே மேற்கண்டவாறு கடவுளாகிய பரம பிதாவினிடத்திலிருந்தே எல்லாச்சீவவர்க்கங்களும் சரீரம் தந்தருளப்பெற்று வந்திருப்பதால், நாம் யாவரும் ஒரே வயிற்றிற்பிறந்த சகோதரர் என்னும் சகோதர பாவம் உடைய

வராய், அங்ஙனம் யாவரும் சகோதரர்களாகவே சுகதுக்கங்களிலும் தனக்கெப்படியோ அப்படியே பிறருக்குமுண்டென்பதை யறிந்து, பரஹிம்சை, பரதிரவ்யாபகாரம், முதலிய தீச்செயல்புரியாமல், பிறர் துக்கத்தையும் தன் துக்கமாகப் பாவித்து "ஒல்லும்வகையா லறவினையோவாதே செல்லும்வாயெல்லாஞ்செயல்" என்றபடி, தன்னாற்கூடியவரையிற் பரோபகாரம்புரிந்துகளங்கமில்லாஉளங்கனிந்து, நம்மைப்படைத்த கடவுளின் ஆதிசங்கல்பத்திற்கு மாறின்றிப் பரலோகத்தில் நித்யநிரதிசயாநந்த வாழ்வைப் பெறுதற்குரிய யாவும் குறைவறப்புரிய முயலுவதே மனிதர் கடமையாம்.

6. இவ்வாறின்றித் தன் இகசுகமொன்றையே கருதியிருப்பானாயின், மறுமைக்குரியவைகளைச் செய்ய இயலாத பசுபக்ஷிகளுக்கும் மனிதனுக்கும் பேதமின்றி, அம்மனிதன் இகத்தில் யாவராலும் இகழப்படுபவனாய், இம்மனித யாக்கையாற் பெறவேண்டிய பயனைத் தவறவிட்டவனாய், மறுமையில் நரகத் துன்பங்களை யடையக்கூடியவனாகவுமாகிறான்.

ஆதலால் இகபரவாழ்விரண்டையும் தேடவேண்டியதே, மனிதரிலக்கணமும் கடமையுமாமெனக்கொண்டு, அவைகளுக்கு வேண்டியதாய் மேற்கூறியவாறு யாவரிடத்தும் சகோதரவாஞ்சையுடன் தன்னால் கூடுமான பரோபகாரம் செய்தலே சிறந்தவழியாகும்.

இப்பரோபகாரமும் ஜீவகாருண்யமின்றி நிகழாது. ஜீவகாருண்யம் என்பது ஜீவர்களிடத்துக்காட்டும் இரக்கமாம். காருண்யம், இரக்கம், அருள், எனினும் பொருள் ஒன்றே. கொல்லாமை, வெகுளாமை, இன்னா செய்யாமை, முதலியவைகளும், இச்சீவகாருண்யத்துள் அடங்கும். உலகில் புண்ணியம் ஒருவனுக்குப் பொருட்செல்வங்கொண்டாயினும்பொருளில்லாமையாயினும்,வேறு பல வகையாற் கிடைக்கக்கூடியதாயிருந்தாலும், இச்சீவகாருண்யம் என்னும் அருட்செல்வம் ஒன்றினால் கிடைப்பதே மேலாகும். இது பற்றியே "அருட்செல்வம் செல்வத்துட்செல்வம் பொருட்செல்வம் பூரியார்கண்ணுமுள" எனநாயனார்கூறியதுமென்க.(பூரியார்-இழிஞர்) இவ்வறம்ஒன்றே சர்வ சுலபமாய்ச் செய்யக்கூடியதாயும், யாவரும் ஒப்புக்கொள்ளக்கூடியதாயுமிருக்கிறது. இவ்வருள் ஒன்றே இருமை

யுந்தரும் பெருமைபெற்றது. யாங்ஙனமெனில் "அல்லல் அருளாள் வார்க்கில்லை, வளிவழங்கு மல்லன்மாஞாலங்கரி" என இம்மைச் சான்று கூறி இம்மையிற்றுன்பம் நிகழா எனவும் "அருள் சேர்ந்த நெஞ்சினர்க்கில்லை இருள்சேர்ந்த இன்னாவுலகம் புகல்" என மறுமையிற்றுன்ப உலகம் புகல் இல்லையென்றும், தெய்வப் புலவர் திருவாய் மலர்ந்தருளிய திருவாக்கானறியக் கிடக்கின்றன. இனி அருள்சேர்ந்த நெஞ்சினர்க்கு இருள்சேர்ந்த இன்னாவுலகம் புகல் இல்லையெனவே, இன்பவுலகம் புகல் உண்டு என்பது பெறப்படும். அவ்வின்பவுலகம், புண்ணியங்குறைந்தவுடன் மறுபடியும் பிறத்தலைச் செய்கின்ற சுவர்க்காதி போக லோகமே உண்டெனக் கூறுவரேல் அஃது அன்று. இருள்சேர்ந்த இன்னாவுலகம் புகல் இல்லையெனவே, அந்த ஸ்தாநமானது அநேக சூரியர்கள் ஒன்றாகச் சேர்ந்து நிறைந்து பிரகாசித்தாலும், நிகரற்ற ஒளியையுடைய தாய், ஈசுவர ஸ்வயம்பிரகாசத்தையே நிறையப் பெற்றிருக்கும் என்று ஆன்றோர் துணிபு. "சுடரொளி யாய்நின்ற தன்னுடைச் சோதி" என்றும் அகண்டமான பேரொளி சேர்ந்ததும் "நலமந்தமில்லதோர் நாடு" "அந்தமில் பேரின்பவீடு" என்றும் இவ்விதம் பேரின்பம் நிறைந்துள்ளதுமாகிய முத்தியுலகமே புகல் உண்டு என்பது தெற்றென விளங்கும்.

7. ஆதலால் சகோதர பாவத்தாலுண்டான ஜீவகாருண்யத்தை முதன்மையாகக்கொண்ட பரோபகாரத்தினல் இகபர வாழ்விரண்டும் கைகூடுமென்பது நாட்டப்பெற்றது.

இதுபற்றியே இற்றைக்குச் சுமார் 35 வருடங்களுக்கு முந்திய நம்மிந்தியநாட்டு ஜநங்களின் மந நிலைமைக்கும், பிந்தியவர்களின் மந நிலைமைக்கும் முறையே ஏற்றக்குறைவுகளாகிய மாற்றுக்குணங்கள் தோற்றித் தேச மத பாஷாபிமாநங்குன்றி, நாத்திகம் பேசி நாத்தழும் பேறியவர்களாய், ஆத்திகம் தொலைய நாத்திகந்தழைய, ஆரம்பித்ததையறிந்த பகவான் "உலகில் ஞாநங்குன்றி அஞ்ஞாநந்தலைப்பட்டு அபிவிருத்தியாகும் காலத்தில் தர்மத்தை நிலைநிறுத்த நானேயுகங்கள்தோறும் அவதாரம் செய்வேன்" என்று பகவத்கீதையில் உபதேசித்திருந்தபடி, தானே இப்பொழுது அவ

தாரஞ்செய்தநுபோல இக்காலத்திய ஆங்கில நாகரிகத்திற்கொத்த படி மானிக்காட்டு மானைப்பிடிப்பார் போல, பிளவாட்ஸ்கி அம்மையார், கர்னல் ஆல்காட், அனிபிஸன்ட் அம்மையார்,முதலிய ஆங்கில அறிஞர்களைக்கொண்டு பிரஹமஞ்ஞான சபாரூபமாகத் தோன்றி மேற்கூறியவாறு, இருமையுந் தருவதற்கு மூலகாரணமாயுள்ள சகோதரபாவத்வம், ஜீவகாருண்யம், பரோபகாரம், மதங்களினுள் ஒற்றுமை முதலிய சுலபமான தர்மங்களை அதன் கொள்கைகளாக அமைத்து, அக்கொள்கைக்கு மாறின்றி நடக்கும்படி ஏற்பாடு செய்து உலகத்தினின்று நெடுநாளைக்கு முன்னரே தொலைந்து போகவிருந்த நமது உத்கிருஷ்டமான ஆஸ்திகமதம் தலைகாட்டி நிலைநாட்டி விருத்திக்குவரும்படி செய்திருக்கிறதை யாருமறிவர்.

8. இத்தகைய சங்கம் நம்மிந்திய தேசத்தின் மூலவிருக்ஷமாக சென்னை ஆதியார் க்ஷேத்திரத்திலும், அதன் கிளைச்சங்கங்கள் பன்னூறுகளாக பல நகரங்களிலும் சிறு கிராமங்களிலும் தோன்றி நடைபெறுகின்றன.

ஹிரித்துவாரமங்கலம் என்னும் கிராமத்தில் ஸ்ரீமாந் இரகுநாதராஜாளியார் அவர்களின் முயற்சியால் ஒருகிளைச்சபையும் ஸ்தாபிக்கப்பெற்றுள்ளது. அச்சபைக்கு அங்கமாக ஸ்ரீ கோபாலசாமி திரு மடாலயத்தில் இகபர வாழ்விற்குரிய நித்தியாநித்ய வஸ்து விவேகாதிகளைக் கற்றுக்கொள்ளும் மாணவர்களுக்கென்று ஓர் கலாசாலையும் (1) அம்மாணவர்களுடன் வித்வான்களும் ஏனையோரும் சுலபமாக ஆராய்ச்சிசெய்ய உபயோகமாகும்படி பல அருமையான கலைப் பொக்கிஷமென்னலாம் படியான புத்தகசாலை ஒன்றும் (2) இவ்விருபாலருக்கும் சரீர சுகம் இன்றியமையாததாதலின் உயிர்ப்பிணியேயன்றி உடற்பிணியும் நீங்கிச் சரீராரோக்கியம்பெற, பல மகான்களின் முறைப்படி பல திவ்யதரமான அவுடதங்கள் சேகரிக்கப்பெற்ற ஔஷதசாலை ஒன்றும் (3) ஆக இம்முச்சாலைகளும் ஒருங்கே ஏககாலத்தில் ஷை ஸ்ரீமாந் இரகுநாத ராஜாளியார் அவர்கள் ஸ்தாபித்துள்ளார். அவர் நற்காரியம் யாவராலும் மெச்சத்தக்கது.

ஆ. வி. கோபாலசாமிநாயக்கர்.

சுமதி என்னும் உத்தமியின் சரித்திரம்.

(17-ம் பக்கத் தொடர்ச்சி).

கோபிநாதனும் சுமதியும் சகோதர வாஞ்சையுடன் உல்லாசமாக வநத்தில் காலங்கழித்துவரும்நாளில், ஒருநாள் இருவரும்காலக்கடனை முடித்துக்கொண்டு அவ்வநத்துக் கருகாமையிலுள்ள ஒரு குன்றுக்குச் சென்று அதன்மீது அமர்ந்திருக்கும் ஆலயந்தொழுது வரக் கருதினார்கள். சிறிது தூரம் நடக்கவே, வெயிலின் கொடுமையால் சுமதியின் மெல்லிய சரீரம் வாடத்தொடங்கிற்று. களைப்போ மேலிட்டது. தாகமும் அதிகரித்தது. கால் நொந்து நொந்து கடுஞ் வழிநடந்து சென்றனர் அச்சிறுவர். கோபிநாதனோ, அடிக்கடி காட்டிற்போய் வேட்டையாடி வழக்கப்பட்டவனானபடியால், சிறிதும் களைப்பைப் பாராட்டாதவனாய்ச் சென்றுகொண்டிருந்தான். சுமதியோ, தள்ளாடித் தத்தளித்தனள். அதனைக்கண்ட கோபிநாதன் அவளை ஒரு விசாலமான ஆலமரத்தின் அடியில் உட்காரச்செய்து அவளது நீர்வேட்கையைத் தீர்க்கத் தண்ணீர் கொணரப்போனான். அவ்விடமோ மேடான கரட்டுநிலம். ஒரே வெளியாய்த் தோப்புத் துரவுகளின்றி இருந்தது. நீரகப்படுவது அரிதாய்விட்டது. "நீர்நசைஇ வேட்கையின் மானின்று விளிக்கும்" பாலைவனம்போற் காணப்பட்டது. கோபிநாதன் சிறிதுதூரஞ்சென்றும் தண்ணீர்கிடைக்கவில்லை. போகும் மார்க்கத்தில் ஒரு மானைக் கண்ணுற்றான். அன்று ஆகாரத்துக்கும் உதவும் என்று அதனை நோக்கிச் சென்றான். அது வில்லுங் கையுமாக ஒரிளைஞனைக் கண்ணுற்றதும், தாவிக்குதித்து மனோவேகத்தினும் வேகமாகச் சென்றது. கோபிநாதனும் குறி வைத்து அம்பு எய்தான். குறி தப்பிப்போயிற்று. இருந்தாலும் விடாமல் பின்தொடர்ந்து சென்றான். அது சில இடங்களில் மறைந்தும் சில இடங்களில் வெளிப்பட்டும் விளையாடிக்கொண்டே வெகு தூரம் சென்றுவிட்டது. கோபிநாதனும் பின்தொடர்ந்து செல்லச் சிறிதும் சலிக்கவில்லை. மாரீசனைப்பின்தொடர்ந்த ஸ்ரீ இராமபிரானை நிகர்த்தான் கோபிநாதன். மான்வேட்டையிற் காட்டிய ஊக்கத்தில் மங்கையாகிய தங்கையின் தாகத்தைக்குறித்து அவனுக்குச்சிறிதும்

ஞாபகம் வரவில்லை. கடைசியாய் இரண்டு பள்ளத்தாக்குக்களுக்கு மத்தியில் மானைத் துரத்திச்சென்று மான் தப்ப வழியில்லாமல் அதனைத் தன் கூரிய அம்பால் கொன்று வீழ்த்தினான்.

சுமதியோ களைப்பால் ஒன்றும் அறியாமல் அயர்ந்து தூங்கிவிட்டாள். சிறிதுநேரத்துக்கெல்லாம் விழித்துக்கொண்டு பார்த்தாள். தன் அருமைச் சகோதரனைக் காணவில்லை. "நெடுநேரமாகியும் அண்ணன் வராத காரணமென்ன, போன இடத்தில் என்னஆபத்து நேர்ந்ததோ? தெரியவில்லையே. ஒருகால் தண்ணீர் அகப்படாமல் களைப்பால் என்போல் அவனும் தூங்கிவிட்டானோ? அல்லது தண்ணீர் அகப்படாமல் இவ்வநாந்தரத்தில் இன்னும் அலைந்துகொண்டிருக்கிறானோ? ஒரு நிமிஷமாவது வீண்பொழுது போக்கானே. இன்னும் சற்றுநேரம் பொறுமையுடன் காத்திருப்போம். உச்சிப் பொழுதிற்கு மேலாய்விட்டாலும் காத்திருப்பதே நலம்" என்று நினைத்து நாலாபக்கங்களிலும் சுற்றிச் சுற்றிப் பார்த்தவண்ணமாயிருந்தாள். சூரியனும் குடதிசையிற் சாய ஆரம்பித்தான். சுமதிக்கு மநங் கலங்கிற்று. "அந்தோ! தெய்வமே! உற்றார் பெற்றாரை விட்டுப் பிரிந்தும் சகோதரன் ஒருவனாவது இருக்கிறான் என்று சந்தோஷித்துக்கொண்டிருந்தேனே. அதற்கும் இடையூறு உண்டாகும்போற் காண்கின்றதே. நான் என்செய்வேன். என் அருமைச் சகோதரன் எனக்காக எங்கெல்லாம் ஓடித்திரிகிறானோ. அவனுக்கு என்ன அபாயம் நேர்ந்ததோ. என்றைக்கும் பதினைந்துநாழிகைக்கு மேல் வெளியில் தங்கிநிற்க மனம்பொறானே. நாழிகை இருபது ஆகியும் இன்னும் வரக்காணேனே. இஃதென்ன விபரீதமாக இருக்கிறதே. கோபிநாதா! என் உயிர்க்குயிரான அண்ணா! ஏழையாகிய என்னை நீ தனியேவிட்டுச் சிறிதும் பிரிந்திருக்கமாட்டாயே. ஏன் இத்தனை நாழிகையாகியும் வரவில்லை. எங்குற்றாய்? நீபோகும்போது நானும் உன் பின்னேயே வராமற்போனேனே. பெண்புத்தி பின்புத்தி யாயிற்றே. இவ்வுலகத்தில் யான் எவ்வாறு தனித்து வாழ்வேன். பெற்றோரை இழந்த துக்கம் சிறிதுந் தோன்றாமல் அப்பன் நீ, அம்மை நீ, என்னாருயிர் நீ, என்று நினைந்து நினைந்து அடைந்த மநமகிழ்ச்சியெல்லாம் அடியோடே அற்றுப்போகும்போற் காணப்படுகிறதே. என் அண்ணா! உன்னை இனி என் கண்கள் காணப்

பாக்கியம் பெறுமோ. ஒருநிமிஷம் ஒரு யுகமாகத் தோன்றுகிறதே. உன்னைப் பார்த்தாலும் என் பசி தீருமே. ஐயோ! தெய்வமே! என்னை இப்படி அநாதைபாக்கலாமா? இனிஎன் உயிர் இருந்தாலென்ன. போனாலென்ன. தஞ்சமென்றிருந்த என் அருமைத் தமையனில்லாமல் என் உயிர் எப்படி உய்யும்? பகவானே! என்னைச் சோதிக்காதேயும். ஏழையாகிய யான் அச்சோதனைக் கிடாகமாட்டேன். வீணில் என்னுயிரை வாட்டாமற் காத்தருளும். உமது கருணைக் கடாக்ஷத்தால் நோக்கியருளும். என்செய்வேன்! என்செய்வேன்!!" என்று ஏங்கித் தயங்கிப் பேதையாகிய சுமதி விம்மி விம்மி அழத் தொடங்கினாள். எரிகிற நெருப்பில் நெய்வார்த்ததுபோல் சூரியனது கொடிய உஷ்ணமும் அவளுடைய மனக்கொதிப்பை அதிகரிக்கச் செய்தது. இவ்வாறான மனோநிலையில் சிறிது தூரத்தில் மானிடக்குரல் கேட்டது. அழுதகண்ணும் சிந்திய மூக்குமாக விருந்த சுமதி அக்குரலைக்கேட்டவுடன் கோபிநாதன் வந்துவிட்டான்போல் தோற்றுகிறது. பகவான் காருண்யமூர்த்தியானதால் ஏழைமீதிரங்கி என்னருமை அண்ணாவைக் கண்ணுற்றுக் களிக்கக் கிருபைசெய்தார்போலும். இந்நிர்மாநுஷ்யமான காட்டில் வேறு மானிடக் குரல்கேட்க நியாயமில்லை. கோபிநாதனே வரவேண்டும். ஒருகுரல் கூப்பிட்டும் பார்ப்போம்" எனக் கருதி "அண்ணா" என்று உரத்துக் கூவினாள். மறுமொழி யாதொன்றும் கேட்கவில்லை. மறுபடியும் இரண்டு மூன்று குரல் உரத்துக் கூவினாள். யாதொரு அரவமும் கேட்கவில்லை. "இஃதென்ன விபரீதமாக இருக்கிறது. சற்றுமுன் கேட்ட குரலும் காணோமே. மநத்தின் சங்கற்பந்தான் அவ்விதம் கேட்கச்செய்ததோ. அல்லது உண்மைதானோ. சற்று நிதானித்துக் கேட்போம்" என்று குரல்கேட்ட திக்கைக்குறித்துச் செவிசாய்த்தனள். ஒரு பெரிய அரவம் கேட்டது. ஒரு குரலுக்குப் பல குரல்கள் கேட்கத் தொடங்கின. கால்நடைச் சப்தமும் வரவர அதிகரித்தது. பின்னும் சற்று உற்றுநோக்கவே அடுத்த பள்ளத்தாக்கினின்றும் பல மனிதர்கள் பல கால்நடைகளை ஓட்டிக்கொண்டு மேடேறிவந்தனர். "ஏதோ ஒரு பெருங்கூட்டம் காணப்படுகின்றது. பல மனிதர்கள் கூட்டாய்க் கால்நடைகளை ஓட்டிக்கொண்டு வருகின்றனர். தெய்வாதீநம் கோபிநாதனும் வராமலிரான். அவர்களு

டன் கூடிக்குலாவி வருவதால்தான் காலதாமதம் ஆயிற்றுப்போ லும். சற்றுப்பொருத்தறிவோம். 'ஆத்திரக்காரருக்குப் புத்திமட்டு' என்பார்களே. நாமேன் அதற்குள் ஆத்திரப்படவேண்டும். மலிர் தால் கடைக்கு வருகிறது" என்று மிக்க ஆவலுடன் அக்கூட்டத் தின் வரவை எதிர்பார்த்துக்கொண்டு, அம்மரத்தடியிலேயே நின்று கொண்டிருந்தாள். சற்று நேரத்திற்கெல்லாம் ஒரு பெரும் வியா பாரக்கூட்டம் வந்து கிட்டியது. சுமதியின் கண்கள் கோபிநாதனை அக்கூட்டத்தில் தேடத்தொடங்கின. ஆருயிர்ச் சகோதரனைக் கா ணுமல் அவை ஏக்கமுற்றன. அவள் மனம் பொறுமல் பெருங்குர லுடன் அண்ணு! அண்ணு!! என்று அலறினள். புயற்காற்றுல் அடியுண்ட மெல்லிய வாழைபோல் தரையிற்சாய்ந்தனள். புரண்டு புரண்டு அழுதனள். "மறுபடியும் எழுந்தனள். மறுபடியும் விழ்ந் தனள். நெட்டுயிர்ப்போடு ஐயோ தெய்வமே" என்று அரற்றினள்.

இக்கோலத்தைக்கண்ட தார்வணிகர்வேந்து அவ்வணங்கினிடம் வந்து "மைக்குழலாய்! நீ எக்குலத்தாய்? யார்மடந்தை? யாதுன் னூர்? யாதுன்பேர்? நெக்குருகி நீ யழுதற்கென்னிமித்தம்?" என்று மிக்க அன்புடன் வினவினன். அப்பெண்ணங்கோ துக்கத்தின்மிகு தியால் அவற்றிற்கு யாதொரு மறுமொழியும் பகரவில்லே. வணிகர் வேந்தும் "நங்காய் உனக்குள்ள மனோவருத்தத்தை வாய்விட்டுச் சொல். சிறிதும் கவலேகொள்ளாதே, இவ்விதம் நீ துக்கிக்கக் கார ணமென்ன?" என்று கேட்கவே சுமதியும் சிறிது துக்கத்தை மறந் தவளாய் "ஐயா! என் தமையன் தண்ணீர்கொணர இக்காட்டுக் குள் சென்றுன், காலேயிற்போனவன் இன்னும் வரவில்லே. நீங்கள் வழியில் அவனே எங்கேயாவது பார்த்தீர்களா? தாய்தந்தையற்ற அநாதைக்கு அவனே தஞ்சம் என்றிருந்தேன். என்செய்வேன், அவனுக்கு என்ன ஆபத்து நேர்ந்ததோ! தெரியவில்லேயே. நான் எங்ஙனம் பிழைப்பேன்" என்று சொல்லிமுடியுமுன், அவளே யறி யாமல் துக்கம் மேலிட்டு விம்மி விம்மி அழத்தொடங்கினள். வணி கர் வேந்தன் சுமதியின் நிலேயை உணர்ந்து பரிதபித்தனன். அவள் வடிவழகைக்கண்டு பிரமித்தனன், "இம்மாது மானுடப்பெண் தா னே! தெய்வகன்னிகையோ அறிகிலேன். கண்ணிமைத்தலாலும் கால் நிலந்தோய்வதாலும் மானுடப்பெண்ணே யாவாள். இவளோ

திக்கற்றவளாயிருக்கிறாள். கண்ட என் மநமும் கண்ணும் கவர்ந்திட வனப்புவாய்ந்தவளாகிறாள். இவளை எவ்விதமாகவாவது இணக்கி மணம்புரியவேண்டும். இவ்வித சிருஷ்டியைப் படைத்த பிரமன் கைவன்மையே வன்மை. எந்த அவயவமும் மாசு மருவின்றித் தூய்மையாய் இருக்கிறது. இவ்வநாதைக்கு ஒரு நாதன் வேண்டுவதும் இன்றியமையாததே. சகோதரவாஞ்சையால் வக்கமுற்றிருக்கிற இவளது மநத்தைத் தேறச்செய்து, பின் எவ்வாறாகவாவது இவளை இணக்க முயல்வேன்'' என்று எண்ணிப் பேசத்தொடங்கினன்.

(இன்னும் வரும்)

எஸ். சாமிநாத அய்யர்.

நன்மொழி.

108. சமம் என்பது, சித்தமடக்கல், தமம் என்பது, செயலடக்குதல், இந்திரியங்களை அடக்குதல். மநம் நினைக்கும் நினைப்பு, இந்திரியகள் வாயிலாகத் தொழிற்படும். கர்மேந்திரியங்கள் ஐந்து. ஞானேந்திரியங்கள் ஐந்து. ஆக பத்து இந்திரியங்களுண்டு. அவைகளை அடக்குதல் என்றால் அவைகளைப் பொய்த்துப்போம்படி செய்தல் அன்றாம். ஆனால் அததன் இந்திரியகோளங்களையும், அக்கோளங்களின் சக்தியாகிய இந்திரியங்களையும் ஆராய்ந்து அவைகளின் உண்மைநிலைகளை அறிதல்.

109. உபரதி, பொறுமை, எச்சமய வேற்றுமைகளையும் எவ்வபிப்பிராயங்களையும் பிங்நிலைமைகளையும் எவ்வித சுகதுக்கங்களையும், யாதொரு மனக்கிலேசமின்றி சகித்தல். இவ்வேற்றுமைகள் நித்தியமானவைகள் அல்லவென்றும், வெளித்தோற்றங்களென்றும் அறிகிறான். அதனால் பொறுமைகொள்ளுகிறான் நித்யாநித்யவஸ்து விவேகமே இந்த சீலம் எற்படுகிறதற்கு முக்கியமான காரணம். பொருளல்லவற்றை பொருள்எனக் கொள்ளாமல் உண்மை நிலைமையை நன்கு உணர்ந்து வெளித் தோற்றங்களால்மருளாமல் பொறுமை பெறல்.

184

* 'வெள்ளியம்பலம்' என்னும் ஞாநிகளின் சங்கமும் அதனின்று வெளிவரும் ஆசாரிய புருஷர்களும்.

"வீணிலே அலையாமல் மலை இலக்காக நீர்
வெளிப்படத் தோற்றல் வேண்டும்
வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை பெற்ற
வித்தகச் சித்தர் கணமே."—தாயுமானவர்.

இவ்வுலகத்தின் தற்காலத்தியச் சரித்திரகாலங்களுக்கு முற்பட்ட காலத்தை நோக்குமின்; மஞ்சிபோன்றுமறைவாய் இருக்கின்ற புராணகாலத்திற்கும் முற்பட்டகாலத்தை நோக்குமின்; புராணமும் ஏற்படாத காலத்திற்கு இன்னும் முற்பட்டகாலத்தையு நோக்குமின்; இப்பூமியில் மனிதவர்க்கம் ஆரம்பமாகும் அத்தருணத்தை நோக்குமின்; அப்படி நோக்குவீர்களேயாகில், 'சுக்கிரன்' என்ற கிரஹத்தினின்று ஜோதிர்மயமான சுவர்ணச்சாயையுள்ள ஒரு மேகம் பூமியின்மீது பளிச்சென்று வந்திறங்கி அமைவுறுவதைக் காண்பீர். சுக்கிரனோ, பூமிக்கப்பால் வெகுதூரத்திலுள்ள கிரஹம். அக்கிரஹத்தினின்று சுத்தமான ஆகாயத்தின்வழியாக, அக்கினியின் பிரகாசமுள்ள ஒரு மேகவடிவம், ஒரு பெரிய சுவர்க்கலோகத்தின் ஹம்ஸபக்ஷிபோன்று, ஆகாயத்தைக் கிழித்துக்கொண்டிறங்கி, புராணங்களில் 'சுவேததுவீபம்' என்று கூறப்பட்டிருக்கும் துவீபத்தில் அமைந்து உட்கார்ந்தது. அந்த சுவேததுவீபத்தில் பின்னர் 'சம்பளா' என்ற திவ்வியநகரம் நிர்மிக்கப்பட்டது. அக்நிமயமான, விமானத்தின்மேல் ஏறிவந்தாற்போல்த் தேஜோமயமான மகாபுருஷர்கள் அம்மேகத்தினின்றும், இவ்வுலகத்திற்கு வெளியானார்கள். அவர்கள் 'அக்நிதேவர்கள்.' ஈசுவரனின் தூதர்களாக இப்பூமியின்கண் பிரவேசித்தார்கள். அக்காலத்தில் இப்பூமியில் நடைபெற்ற மனிதவர்க்கம் இளம்பிராயத்திலிருந்தது. அதைச்சார்ந்த

---

* குறிப்பு:—இஃது இவ்வருஷம் ஜனவரி௴ 1௳ ஆதியாற்றின்கண்ணுள்ள பிரம்மஞாந வாசிரமத்தின் ஓர் பாகத்தில், விசாலமாய்ப் பரவியிருக்கின்ற ஒரு ஆலவிருக்ஷத்தினடியில், சாயங்காலத்தில் சூரியாஸ்தமனத்திற்கு முன்னர், மாதுஸ்ரீ அன்னிபெசண்டு அம்மையார் ஆங்கிலத்தில் செய்த உபந்நியாஸத்தின் சுருக்கமான மொழிபெயர்ப்பு.

மனிதர்களை விகாசாபிவிருத்திமுறையில் நல்வழிப்படுத்த உதவிபுரியும்படியாக இம்மகாபுருஷர்கள் இவ்வண்ணம் பூமியிலவதரித்தார்கள். இவர்கள் 'வெள்ளியம்பலம்' என்னும் ஞானசபையின் மூலாதாரமாயிருக்கின்றார்கள். அன்பினாலும், சிரத்தையினாலும், அவர்களின் மஹிமையைப்பார்த்த வியப்பினாலும் பூமியில்,இவர்களுக்குப் பலபெயர்கள் வழங்குவன.புராணங்களில் நாலு'குமாரர்கள்'என்றும், வீரியக்கட்டுலைபாதபாலர்களென்றும்,சில சமயங்களில் 'சிவகுமாரர்கள்' என்றும், இவைபோன்ற பலநாமங்கள் இவர்களுக்குண்டு, ஆயினும் பெயர்கள் முக்கியமன்று. அவர்களோ "மாற்ற மனங்கழியநின்ற" மகாபுருஷர்கள். ஒருகோடியே அறுபதுலக்ஷம் வருஷங்களுக்கு முன்னர் அவர்கள் இவ்வுலகத்திற்கு வந்தகாலம். அவர்கள் வந்து தங்கின 'சுவேததுவீபம்' அப்போது வடக்குசமுத்திரத்தினலையால் மோதப்பட்டுக் கொண்டிருந்தது. தற்காலத்தில் அச்சமுத்திரம் அவ்விடத்தில்உலகத்தில்நேர்ந்த பெரியகுழப்பத்தினால், வற்றிப்போய் 'கோபி' பாலைவனமாக மாறிப்போயிருக்கின்றது. இதேசமயத்தில் 'ஆபிரிக்கா'கண்டத்தில் முன்ஜலமாயிருந்தபாகம் 'சஹாரா' மணல்வநாந்தரமாக மாறிப்போனது. இந்த 'கோபி' மணல்வநாந்தரத்தில், அங்குமிங்கும் இற்றைக் கைம்பதினாயிரம் வருஷங்களுக்கு முன்னர், கம்பீரமானகட்டிடங்கள் கட்டப்பட்டன. அவைகளின் சின்னங்கள் சிதிலமாய்ப்போன ஆலயங்களின் பாகங்கள் இப்போதும் கம்பீரமான காக்ஷிகளாக விளங்குகின்றன. அவைகளுக்குச் சமீபத்தில், மணலால் மூடப்பெற்ற ஒரு பட்டணத்தின் சின்னத்தைக் காணலாம். அந்தப் பட்டணத்தையும் துவீபத்தையும் இணைக்கும் ஓர் அற்புதமான வாராவதிஇருந்தது.அவ்வாராவதியின் கீழ்ஓடிக்கொண்டிருந்த வெள்ளம் வெகுகாலத்திற்கு முன்னரே அம்மணல் வநாந்தரத்திற்குள் அந்தர்க்கதமாகிவிட்டது.

2. 'வெள்ளியம்பலம்' என்று சொல்லப்படும் ஞானசபையை ஸ்தாபித்தவர்கள் இம் மகாங்களேயாகையால், இவர்களை 'எங்கும் பரவும் ஆலவிருக்ஷத்தின்மூலம்' என்று குப்தசாஸ்திரங்களில்பிரஸ்தாபம் நடைபெறுகின்றது. 'எங்கும் பரவும் ஆலவிருக்ஷம்' என்ற பிரதிகமானது நேர்மையாயும் அழகாயும் அமைந்துள்ளது.இப்போது உங்கள் முன்னிருக்கின்ற விசாலமான ஆலவிருக்ஷத்தைப் பாருங்

கள். மத்தியில் ஸ்தம்பம்போன்ற அடிமரம். அது நாளடைவில் சிறுகச் சிறுகப் பெருக்கிருக்கின்றது. அவ்வடிமரத்தினின்று வெகு தூரம் பரவிக்கொண்டுபோகின்ற கிளைகளுண்டாகியிருக்கின்றன. அக்கிளைகள் அங்குமிங்கும் விழுதுகள்விட்டு, அவ்விழுதுகள் நீண்டு பெரிதாகி, பூமியைப் ஸ்பரிசித்து, வேரூன்றுகின்றன. இதனால் ஆதிமரம் என்றும் நீடித்திருக்கக்கூடிய தகைமையைப் பெறுகிறது. இதுபோலவே அந்த 'வெள்ளியம்பலம்' என்ற ஞானசபை உலகத்திற்குப்பிராணாதாரமான முக்கியஸ்தானம். நம்மூன்றேன்றும் இவ் வாலமரத்தின் கிளைகள்போல, ஞானாசாரியர்களின் பரம்பரையாகிய அநேகம் கிளைகள் இவ் 'வெள்ளியம்பலத்'திலிருந்து பலகாலங்களில் பூமியின் பலபாகங்களில் விழுதுவிட்டு வேரூன்றி, அவ் வேரூன்றின விடங்கள்தோறும், புதியமதங்கள் ஸ்தாபிக்கப்பெற்றன. அவைகள் மூலமாய்ப் பூமியில் அந்தந்தவிடத்தில்,ஞானஜ்யோதிஸ்விளங்கும்படியான ஸ்தானங்கள் அமைகின்றன. இவ்விதமே 'வெள்ளியம்பலம்' என்ற விசாலமான ஆலவிருக்ஷம் உலகமெங்கும் பரவி மென்மேலும் மஹிமைபெற்றுவரவே, உலகத்திலுண்டாகிக்கொண்டு வருகின்ற பலஜாதியார் தலைமுறைதத்துவமாய் அதனிழலின்கண் ணடைக்கலம் புகுந்து சிரேபஸையடைந்து வருகின்றார்கள்.

3. இதுதான் 'வெள்ளியம்பலம்' என்று சொல்லப்படும் ஞானக்குழாத்தின் ஆரம்பம் இவர்கள்தான் அதை ஸ்தாபித்த மகாபுருஷர்கள். இந்த வெள்ளியம்பலந்தான் மனிதவர்க்கத்தை காக்கும் ரக்ஷைபாகவும் நல்வழிப்படுத்துங் குருவாகவுமிருக்கின்றது. தேசத்தாருக்குப்பின் தேசத்தார் உண்டாகவும், அதாவது பலகூடும்பங்கள் சேர்ந்து ஒருபெரிய வகுப்பாகவும் பலவகுப்புக்கள் சேர்ந்து ஒரு. தேசத்தாராகவும் மனிதவர்க்கம் விருத்தியாகிக்கொண்டுவருவதில், 'வெள்ளியம்பல'த்தின் சம்பிரதாயமுறையை யநுசரித்து ஓரோர் கண்டங்களிலும் சபைகள் ஏற்பட்டு, நாகரிகமும் ஞானமுறையும் பரவுதற்கு அநுகூலமான மத்தியப் பிரதேசங்களாக அமைகின்றன.

4. இப்போது 'அட்லாண்டிக்கு' மகாசமுத்திரம் இருக்கின்ற அடிப்பிடம் ஜலத்திற்குமேல் இருந்தகாலத்தைக்கவனியுங்கள். அதில்

ஒரு பெரிய 'கண்டம்' இருந்தது. அந்தக் கண்டத்தில் ஒரு பெரிய பட்டணம் இருந்தது. விஸ்தாரமான (Toltec) டால்டெக்கு ராஜாங்கத்தின் பிரதான நகர் அது. அந்நகரத்தின் வாசல் சுவர்ணத்தால் அமைந்துள்ளது. தேவாம்சத்தைப்பெற்ற ஒருவர் சுவேதசக்கரவர்த்தியாக அவ்விராஜ்ஜியத்தையாண்டார். 'முன்வெள்ளியம்பலம்' என்று பிரஸ்தாபித்த மகா சபையினின்று இதன்கண் வந்து மகா புருஷர்கள் உயர்வற உயர்நலமமைந்த கம்பீரமான நாகரிகத்தை ஸ்தாபித்தார்கள். அதன் பின்னர் அடிமரத்தினின்றும் கிளைகள் பரவுவதுபோல, சிறுசிறுராஜாங்கமும், பெரியபெரிய ராஜாங்கமும் ஒன்றின்பின்னொன்றாய்த்தோன்றுவதாயின. 'எகிப்து' தேசத்தில் தோன்றின அற்புதமான நாகரிகமும் இம்மகாபுருஷர்களால் ஏற்படுத்தப்பட்டது. 'புன்ஸன்' என்னும் ஜர்மானியதேசத்து அறிஞர் ஒருவர் 'எகிப்து' தேசத்தின் உயர்தர நாகரிகத்தைப்பற்றிப் பின் வருமாறு பிரஸ்தாபிக்கிறார். "அந்நாகரிகம் மிகவும் அற்புதமானது. அஃது உலகத்தில் தோன்றிய காலத்தையறியமாட்டோம். ஆனால் அதன்பூர்விகத்தைப்பற்றியும் அது எவ்விதம் உலகத்தில்தோன்றலாயிற்றென்பதைப் பற்றியும் நாமறிய இயலவில்லை". 'எகிப்தியர்' கட்டியிருக்கின்ற பிரஹ்மாண்டமான கட்டிடங்களை, இக்காலத்திய கட்டிடநிர்மாண நிபுணர்களும் சிற்பவல்லவர்களும் இப்போது அழிவுற்றிருக்கிற நிலையில், பார்த்துப் பிரமிக்கின்றார்கள். ஆலயங்களின் உயர்ந்த ஸதம்பங்களின்மேல் இவ்வளவுபெரிய கற்களை யெவ்விதம் ஏற்றிவைத்தார்கள் என வியக்கின்றனர். எகிப்தியரின்வித்தியையையும், ஞானத்தையும், சந்தோஷம் நிறைந்த நாகரிகமுறைகளையும், தேவராஜவம்சங்களையும், ஆரியர்களின் காலத்திற்குமுன்னர் இருந்த தெய்வத்தன்மை பொருந்திய ('Pharoahs'என்ற) அரசர்களையும் சூக்ஷ்மமான பூமிகளைப்பற்றிய அவர்களுடைய அற்புதமான அநுபவவறிவையும், ஸ்தூல வுலகைப்பற்றிய அவர்களின் சாஸ்திரப்பயிற்சியையும், பாருங்கள். அவைகள் மிகவும்மேலானவையன்றோ! 'Atlantes' 'அட்லாண்டிஸ்' என்று சொல்லப்பெறும் நாட்டினின்று இப்போது கீழ்நோக்கினோம்.

இனி மேல்நோக்கிப் பார்த்தோமானல் 'மெக்ஸிகோ' என்ற வேறு ராஜ்ஜியம் தன் நிலையைக் காப்பாற்றுவதற்காகத் தத்தளிக்கின்றதைப்பார்ப்போம், 'எகிப்து' ராஜ்ஜியத்தைப் போலவே, அதுவும் நாகரிகமுள்ளது. 'Aztecks' 'அஜ்டெக்ஸ்' என்ற ஜாதியார் அதை யழிக்குங்காலத்தில் அது மகா புராதந நாகரிகமுடையதாயிருந்தது. 'தென்னமெரிக்கா' வின் சரித்திரத்தை யாராய்வோம். அது, மகாபழமையான வொரு நாகரிகம். மடிந்துபோன பின், அதன் பிரேதத்தைப் போல் காணப்படுகிறது. 'ஸ்பானியா' தேசத்தின் குதிரை ராணுவமும் காலாட்படையும் அஜ்ஜாதியாரை வதம் செய்து, அக்கினிக்கு இரையாக்கி, அருமையான அந்நாகரிகத்தின் சின்னங்களைப் பொய்த்துப்போம்படி அந்தோ! என்ன கொடுமை செய்து போட்டார்கள்!

இனி நம்மிந்திய நிபகற்பத்தைப்பற்றி நமது திருஷ்டியைச் செலுத்துவோம். சமுத்திரத்தின்கீழ் மூழ்கியிருந்த ஹிமாசலமானது, வெளிவந்து அதன் உந்நதமான சிகரங்களை நீலநிறமுள்ளவாகாயத்தில் தோன்றும்படி செய்துகொண்டிருந்த அந்த புராதந காலத்தில், ஹிமாசலத்திற்குத் தென்பாகத்திலுள்ள விடங்கள் மனிதன் காலடிப் படாதனவும் மனித சஞ்சாரத்திற்கு அநர்ஹமாகவும் உள்ள விஸ்தாரமான சதுப்புள்ள களர்ப்பற்றிய நிலமாகவிருந்தது. அப்போதுதான் சமுத்திரம் வற்றித்தரையாக ஏற்பட்டிருந்த தருணமாம். பின்பு வர வர உலர்ந்து களர்மாறிக் கெட்டித் தரையாகவமைந்து, நதிகள் ஏற்பட்டுப் பயிர் பச்சைகள் உண்டாகவே, மனிதன் வசிக்கயோக்கியதையுள்ள நிலமாக அமைந்தது. அப்போது ஏராளமான 'டால்டெக்' ஜாதிக்கூட்டங்கள் ஹிமாசலத்தின் அங்குமிங்குமுள்ள பலகணவாய்களின் மூலமாய், அதன் தென்பாரிசத்திலுள்ள இந்நாட்டிற் பிரவேசித்தார்கள். பல்கிப்பெருகி, இந்தியா தேசமுழுமையும் பரவினார்கள். கம்பீரமான பட்டணங்களை நிர்மித்தார்கள். கோட்டை கொத்தளங்களை யமைத்தார்கள். போக நுகர்ச்சியதிகமாயுள்ள நாகரிகத்தையுண்டு பண்ணினார்கள். இதுதான் புராணங்களில் 'தைத்தியர்'களின் நாகரிகமென்றும், 'தைத்தியர்களின்' காலமென்றும் சொல்லப்பெறும். இப்

பால் உயர்ந்த நாசியும் வீரியமுமுள்ள ஆரிய மகாவர்க்கத்தினரின் வெள்ளம் வடக்கேயிருந்து இந்நாட்டை நோக்கிப் படையெடுத்து வரவே, 'தைத்தியர்'காலம் ஒடுங்கியது. அவர்களும் அடங்கினார்கள்.

5. இவ்விதம் உலகத்தில் பூர்விகசரித்திரங்களை ஆராய்வோமாகில், நம்மநத்தில் அழுத்தமாய்ப்பதியும் விஷயமொன்றுண்டென அறிவோம். அஃதென்னவெனில், கம்பீரமான கல்விப்பயிற்சியும் அற்புதமான சிற்பவேலையமைப்பும், இயற்கையான சக்திகளையாளுந் திறமையும், வெள்ளியம்பலத்தினின்று வந்த மகா புருஷர்களான தெய்வத்தன்மை பொருந்தியவரசர்களால் அந்தந்த ஜாதியாரின் நாகரிக முறையில் ஏற்படுத்தப்பட்டனவென்றும், மனிதவர்க்கம் குழந்தைப்பருவமாயிருக்குங்காலத்தில், அதன் நாகரிகமுறையை நேர்மைப்படுத்தினவர்கள் அம்மகா புருஷர்கள் என்றும், நமக்குத் தெரியவரும். அக்காலங்களில் நிர்மிக்கப்பெற்ற மகாபெரிதான கட்டிடங்களின் இக்காலத்தில் தங்கிநிற்குஞ்சின்னங்களை நாம் கண்ணுறும்பொழுது, அவைகளை நிர்மித்த சிற்பியின் புத்தி நுட்பத்தையும் திட்பத்தையும் மௌனமாக அவைகள் பறையறைகின்றனவைபோலத்தோன்றும். அவைகளைக்கட்டியவர்கள் நாகரிகமற்ற மூடர்கள் அல்லவென்றும் அறிவோம். 'Chaldea' 'கால்டியா' நாட்டில் உள்ள நகரங்களைக் கட்டியவர்கள் அநாகரிகமுள்ளவர்களென்று எவ்விதம்சொல்லத்துணிவோம்? நகரத்தின்மேல் நகரம்,ஒன்றின்மேலொன்றாய்க் கட்டப்பட்டிருந்தனவாகஇப்போது பூமியைவெட்டிச் சோதித்துப்பார்க்கும்போது தெரியவருகிறது! மகா பாதாளத்தில் கட்டியிருந்தநகரத்தை இப்பொழுதுசோதித்துப்பார்க்குங்கால், அணியணியாய் உள்ள ஸ்தம்பங்களமைந்த மண்டபங்களையும், அப்பண்டை நாளிலுள்ள ஜனங்களின் அபிப்ராயங்களையும், நீதிமுறைகளையும், சாஸ்திரமுறைகளையும், விஸ்தாரமாகச்சொல்லும்புஸ்தகங்களும்,சுவடிசுருணைகளும்,ஆயிரக்கணக்காய் அமைந்துள்ள ஸ்வஸ்தி விலாசங்களையும், நாம்கண்கூடாய்க்காணலாம்! இக்காலங்களை நோக்க, சமீபத்தில் ஏற்பட்டுள்ளனவென்று சொல்லப்பெறும் 'Stone henge' 'ஸ்டோன் ஹெஞ்சு' என்னும் ஸ்தலத்திலுள்ள கற்களைத்தூக்கி ஏற்றிவைத்தவர்நாகரிகமில்லாதவர்களா? அக்கற்களில்

ஒரு குழந்தைகூட வசைக்கும்படியானதும், ஒரு ராக்ஷதன் கூட அப்புறப்படுத்தக்கூடாததுமான மிகவும் புத்தி நுட்பத்தால், அமையப்பட்டுள்ள சில ஆடுங்கற்களைப் பார்க்கலாம். அத்தன்மையான கற்களினமைப்புக்குச் சிற்பசாஸ்திரத்தின் திறமை எவ்வளவு தூரம் விருத்தியடைந்திருக்க வேண்டுமென்பதை, அக்கற்கள் 'பேசா மடந்தை'யாகவிருந்துகொண்டு விளக்குகின்றன.

'சீன' தேயத்தின் பழமையும் அதன் நாகரிகத்தின் உயர்வையும் இப்பொழுதுதான் மேல்நாட்டார்க்குத் தெரியவந்து கொண்டிருக்கிறது. 'அமெரிக்கா' தேசத்தைச் சேர்ந்த ஒருவர் இந்தேசத்தினுட் பாகத்தில் பிரவேசித்து யாத்திரை செய்தார். அதில் ஒரு வாராவதியைக் கண்டனராம். அஃது பெரிதான 'Marble' சலவைத் தகட்டுக்கற்களால் அழகாய் அமைக்கப்பட்டிருந்ததாம். அவைகள் எக்காலத்தில் அமைக்கப்பட்டனவென்றும், அவ்வளவு பெரிய கற்கள் எவ்விதம் பொருத்தப்பட்டிருக்கின்றன வென்றும், ஒருவராலும் சொல்லமுடியவில்லை. யாத்திரை செய்தவரோ யந்திரங்களின் பழக்கத்தில் பிரசித்திபெற்றிருக்கின்ற அமெரிக்காதேசத்தின் சிற்பசாஸ்திரி; 'சீன' தேசத்தின் பழமையான நூல்களில் இப்பொழுது ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ள 'Classic of Purity' என்னும் பெயர்வாய்ந்த அருமையான நூல் ஒன்று உண்டு. இது 'சீன' தேசத்து ஞான இலக்கியங்களில் மிகவும் உயர்வான நூல். மேநாட்டிலிருந்து கர்ணபரம்பரையாய் இந்நூலின் கண்ணுள்ள விஷயம் வந்ததாகவும், 'கோ ஹ்சுவான்' ('Ko-Hsuan') என்பவரால் அவர் காலம் வரை ஒலிவடிவாயிருந்து,பின் வரிவடிவாய்ஏற்படுத்தப்பட்டதென்றும் சொல்லப்படுகிறது. "கிழக்கிலுள்ள 'ஹ்வா' ('Hva') நாட்டின் தெய்வத்தன்மை பொருந்திய அரசரிடமிருந்து நான் இதைப்பெற்றேன். அவர் இதைச் சுவர்ணமயமான வாசலமைந்த நகரத்தின் தெய்வத்தன்மை பொருந்திய அரசரிடமிருந்து பெற்றார். இவரோ நாட்டின் தெய்வத்தன்மையான மாதாவினிடமிருந்துபெற்றார்." "சுவர்ணமயமான வாசல் நிலை"யுள்ள பட்டணமென்றபெயர் பிற்காலத்தில் உண்டான பிரதான நகரங்களுக்கு ஏற்பட்டது. இத்தன்மையான நகரங்கள் பலவேற்பட்டன. மத்திய 'அட்லாண்டிஸ்' நாட்டின் கடைசிப்பிரதான நகராயிருந்த பட்

டணத்தின் பெயரும் இதுவே. பழமையான 'க்ரீஸ்' தேசம் உண்டான காலத்தில் மத்திய 'அட்லாண்டிஷின்' பிரதான பட்டணமானது ஏற்கனவே பழமையான பட்டணமாகவிருந்தது.

6. நான்காம் மனிதமகாவர்க்கத்தினின்று ஏற்பட்ட 5-ம்மனிதவர்க்கம் உற்பத்தியானது இவ்விதமே. இதை அதிக கவலையுடன் தெய்வத்தன்மை பொருந்திய ராஜாக்கள் சம்ரக்ஷித்துக்கொண்டு வந்தார்கள். தெய்வத்தன்மை பொருந்திய ஞானகுரவர்கள் கல்வி கற்பித்து நல்வழிப்படுத்திவந்தார்கள். கம்பீரமான தர்மசாஸ்திர முறையை வெளியிட்டவரான 'வைவசுவதமநுவே இவர்களுக்குள் அவதாரமாயினர். ஜநங்களின் பிரயோஜநார்த்தமாக வேதசாஸ்திரங்களைத்தொகுத்து வகுத்த சிரேஷ்டரான வியாசமஹருஷியே இவர்களுக்குள் சரீரமெடுத்து நடை பெறுவாராயினர். பின்னர் பல திவ்ய நாமங்களமைபப்பெற்ற மஹருஷிகள் பின்னர் தோன்றி ஞானசாஸ்திரங்களைக் கற்றுக்கொடுக்கத் தலைமுறைதோறும் அவதாரமாயினர். இந்துக்களுடைய புராணங்களைப்பார்த்தால் 'தெய்வத்தன்மைபொருந்திய ராஜாக்களைப்பற்றிப் பிரஸ்தாபம் வருகின்றது. ஸ்ரீராமரின்சரித்திரங்களைஸம்ஸ்கிருதபாஷையினின்றும்நேரில்கேட்டு அன்பால் உருகாத ஹிந்துவின் ஹிருதயமும், ஆச்சரியத்தால் வியக்காத ஹிந்துமநமும், மரியாதையுடன் வணங்காதஹிந்துவின் தலையும்இருந்திருக்கவும்கூடுமோ? அவரோ அரசர்களுக்குள்உயர்வறஉயர் நலமமைந்த மகாபுருஷன். புத்திரர்களுக்குள் புத்திரன்என்றசொற்கு இலக்ஷியமாவர். தெய்வத்தன்மை பொருந்திய அவர் ஆளுகையோ கம்பீரமானது. பூர்ணம் பெற்ற மனோதீரர் அவர். நீதிமுறை வழுவாநியாயாதிபதி. நேர்மையாய் அரசாக்ஷிசெய்தராஜசிரேஷ்டர்.

7. இவ்விதமே இந்தியாதேசத்தில் மாத்திரமன்றி ஆரியவர்க்கத்தினரின் கிளை வர்க்கங்கள் உலகில் குடியேறினவிடங்களிலெல்லாம், இவ்விதமாகவே நேர்மையும் சிறப்பும் உடையனவாய் அந்தந்த இடங்களிலுண்டான நாகரிகங்கள் நிகழ்ந்தன. அத்தேசங்கள் எல்லாம் அந்நாகரிகங்கள் தோறும், முன் தெய்வத்தன்மை பொருந்திய ராஜாக்கள் இருந்தனர் என்பதைப்பற்றிய நல்ல ஸ்மரணையும், மதஸ்தாபகர்களான ஞானகுருக்களின் பிரஸ்தாபமும், அந்நாட்டார்

களின் பழமையான காலத்தில் தெய்வத்தன்மை பொருந்திய மகா புருஷர்கள் ஆண்டார்களென்றும், கல்விகற்பித்து நல்வழிப்படுத்தினர்கள் என்றும், விஸ்தாரமான பிரஸ்தாபங்கள் உள்ளன. ஆதிகாலத்தில் மனிதர்கள் உடன் கூடவே தேவர்கள் நடமாடினார்கள் என்றும் உறவாடினார்களென்றும், ஆண்டார்களென்றும், கற்பித்தார்களென்றும், ஜனங்களுடைய மனத்தைக் கவர்ச்சி செய்யும்படியான உயர் நலமமைந்த லக்ஷியபுருஷர்களாக, பின்னர் அவர்கள் ஏற்பட்டார்களென்றும், இவ்விதம் பாரம்பரியமான ஐதிகம் இன்னும் இருந்துகொண்டிருக்கிறது. இக்காலத்தில் ராஜா என்றால், ஒரு அற்புதமான மஹிமையும் செல்வாக்கும் உடையர் என மதிப்பு பிரகிருத நாகரிக முறையில் கூட இருந்து வருகிறது. அதற்குக்காரணம் ஆதிபூர்வீகராஜக்கள் தெய்வத்தன்மைபொருந்தியவராயும் ஜீவகாருண்யமுள்ளவர்களாயும், ஞானகுரவர்களாயும், கம்பீரமான தெய்வவல்லமையும் மயிரிழை தவறாத நீதிமுறை உள்ளவராயும், இருந்தார்கள் என்பதின் ஸ்மரணை இன்னும்ஒருவிதமாய்த் தங்கியிருப்பதனாலென்று அறிக. எத்தனையோ கொடுமையாய் அரசாண்ட மன்னர்கள் இருந்திருப்பினும், அவர்களையெல்லாம் மறந்து, இக்காலத்திலும் முடிமன்னர் என்ற பேர்கேட்டமாத்திரத்தில், உலக ஜனங்கள் அவர்பால் அன்பும் வணக்கமும் சிரத்தையும் உள்ளவர்களாயிருக்கின்றார்கள் என்பதை நாம் பார்க்கின்றோம். அரசமுறையைப்பற்றி ஆங்காங்கு பிரஸ்தாபம்பெறும் நிந்தனைமொழியெல்லாம், பயனற்ற விருதாச்சொல்லென்றும் அரசன் என்ற உயர் லக்ஷியமுள்ள புருஷனிடம் ஜனங்களின் ஹிருதயத்தில் குடிகொண்டிருக்கும் அன்பைத் தொலைக்கச் செய்யுமுயற்சி வீண் முயற்சியென்றும், காலம்சென்ற சக்கரவர்த்தினியாகிய 'விக்டோரியா அம்மையார்' லண்டனிலுள்ள 'சேன்ட் பால்ஸ்' ஆலயத்திற்குப்பவனிபோகும்காலத்தில், லண்டன் பட்டணத்தில் வீதிகளில் ராஜாங்கத்தின் பல பிரதேசங்களிலுமிருந்தும் கூடியவர்களான ஆண் பெண் பாலர்களின் முகத்தை ஒருமுறைபார்த்திருப்பரேல், யாவருக்கும் நன்கு விளங்கும். ஜனங்களின் மனத்தில் அந்த அம்மையாரின்பால் பொங்கிவெளிவந்த அன்பின் அலைகளும் அம்மையாரைப்போற்றி வாழ்த்தின வசனங்களின் ஒலியையும் கவனித்தால் ராஜன் என்ற மொழியானது

சௌகரியபக்ஷமாக ஜனங்களால் ஏற்படுத்திய ஒரு கட்டுப்பாடான மொழி அன்று எனவும், 'பார்லிமேண்டு' சபையாரால் லௌகிககாரியங்களைக்கொண்டுசெலுத்த சௌகரியபக்ஷமாக அங்கீகரிக்கப்பட்டு அமைக்கப்பெறும் ஒருவார்த்தை அன்று எனவும், வெள்ளிடைமலை போல் தெளிவாய்த்தெரியவரும். ராஜா உண்மையில் இறைவனிடமிருந்து பெற்ற உரிமையாலாளுகிறான். ஜனங்களுக்குள் ஈசுவரசக்தியின் ஒருஅடையாளமாகவும், ஓர் அம்சமாகவும் விளங்குகிறான். இத்தன்மையான ஐதிகமானதுசகலவல்லமையும் பொருந்திய அரசர்களாயிருந்த மகா புருஷர்களால் ஆளப்பெற்ற ஜாதியார்களின் காலமுதற்கொண்டு கர்ண பரம்பரையாய் நாளிதுவரை வந்துகொண்டிருக்கிறது. (இன்னும் வரும்.)

ப. நா.

விஷுதிநம்.

இரவும் பகலும் ஸமகாலமாய் ஏற்படுந் திநமே 'விஷுதிநம்' என்னப்படும். சூரியன் 'பூமத்யரேகை' (Equator) க்கு நேர் உச்சியில் ப்ரகாசிக்கும் திநங்கள்தான் விஷுதிநங்களாகும். சூரியன், 'மகரவீதி' (Tropic of Capricorn) யினின்றும் உத்தராபிமுகமாய்க் 'கடகவீதி' (Tropic of Cancer) வரை செல்லும் தனது உத்தராயண யாத்திரையின் நடுவில் ஒரு திநத்திலும், மறுபடி கடகவீதியினின்றும் தக்ஷிணாபிமுகமாய் மகரவீதி வரை செல்லும் தனது தக்ஷிணாயந யாத்திரை நடுவில் ஒரு திநத்திலும், பூமத்யரேகைக்கு நேர் உச்சியில் ப்ரகாசிக்கின்றான்.

குறிப்பு: (1) மகரவீதி - Tropic of Capricorn - பூமத்யரேகைக்குத் தெற்கே $23\frac{1}{2}$ யாவது அம்சத்துள்ளது.

(2) கடகவீதி - Tropic of cancer - பூமத்யரேகைக்கு வடக்கே $23\frac{1}{2}$ யாவது அம்சத்துள்ளது.

(3) உத்தராயணம் - சூரியன் உத்தராபிமுகமாய்ச் செல்லக்கூடிய ஆறுமாதக்காலம். (அநுஷ்டாநத்தில் தை மாதம் முதல் திநம் முதல் ஆனிமாதம் முடிய)

(4) தக்ஷிணாயநம் - சூரியன் தக்ஷிணாபிமுகமாய்ச் செல்லும் ஆறுமாதகாலம் (அநுஷ்டாநத்தில் ஆடிமாதம் முதல் திநம் முதல் மார்கழி மாதம் முடிய).

இப்பொழுது அநுஷ்டானத்தில் உத்தராயணம் என்பது தை மாதம் முதல்திநம் முதல் ஆடிமாதம் முதல்திநம் வரையுள்ள ஆறுமாதகால மானதால், அதன் மத்யதிநமான சித்திரை மாதம் முதல்திநமே ஒரு விஷு திநமாகவும், ஆடிமாதம் முதல்திநம் முதல் தை மாதம் முதல்திநம் வரையுள்ள தக்ஷிணாயந காலத்தின் மத்திய திநமான ஐப்பசி மாதம் முதல்திநம் மற்றொரு விஷுதிநமாகவும் ஆக வருஷந்தோறும் இரண்டு விஷுதிநங்கள் வைதிகமுறைப்படி பித்ருச்ராத்தம், தர்ப்பண முதலிய கர்மாநுஷ்டாநங்களுக்காக அநுஷ்டித்துவருகின்றோம். சித்திரைமாதம் ஏற்படும் விஷுவுக்கு 'சைத்ரவிஷு' (Vernal Equinox) என்றும் ஐப்பசிமாதம் ஏற்படும் விஷுவுக்கு 'ஐப்பசி விஷு' அல்லது 'துலாவிஷு' (Autumnal Equinox) என்றும் சொல்லப்படும். நமது நாட்டில் வழங்கும் பஞ்சாங்கங்களிலும் இவ்விரண்டு திநங்கள்தான் விஷு புண்யகாலமாய்ச் சொல்லப்படுகின்றன.

ஆனால் ஜ்யோதிஷசாஸ்திர கணநவிதிப்படிக்கும், ஜ்யோதிஷ யந்திரங்களின் (Astronomical instruments) உதவியாலும், ஆராய்ச்சி செய்வோமாகில், மேற்கூறிய விஷுதிநங்கள் முறையே 22திநங்களுக்கு முன்னதாகவே ஏற்படுகின்றன. அதாவது, உண்மையில், சைத்ரவிஷு என்பது பங்குனிமாதம் 8-ம் தேதியை யடுத்தும், துலா விஷு என்பது புரட்டாசி மாதம் 8-ம் தேதியை யடுத்தும் அமைகின்றன. மேற்கூறிய திநங்கள் நமது பஞ்சாங்கங்களில் முறையே மேஷாயந புண்யகால மென்றும், துலாயந புண்யகால மென்றும் சொல்லப்பட்டிருக்கின்றன. மேற்கண்ட இரண்டு திநங்கள்தான் உண்மையில் விஷு புண்யதிநங்கள். அப்படியிருக்க உண்மையான புண்யதிநங்களை, நாம் கவனியாது, அப்புண்ய திநங்களுக்குப் பின் சுமார் 22-வது திநத்தை விஷு புண்யகாலமாய் அநுஷ்டித்து வருகின்றோம். அதற்குக் காரணம், நமது முன்னோர்களால் எவ்வளவோ அபிவிருத்திக்குக் கொண்டுவரப்பட்ட ஜ்யோதிஷ சாஸ்திரத்தில் வரவர நமக்கு ஏற்பட்ட பயிற்சிக் குறைவுதான்.

தவறு ஏற்பட்ட விதம்: இப்பொழுது அநுஷ்டாநத்தில்வழங்கிவருவது ப்ராசீநநூல்களின் ஆதாரத்தைக்கொண்டுதான் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. நமது அநுஷ்டாநம் தவறுகுமானால் அதற்கு ஆதாரமான பூர்வக்ரந்தங்களே தவறாக இருக்கவேண்டுமென்ற சங்கை ஏற்படலாம். ஆனால் அதன் உண்மை அப்படியல்ல. ப்ராசீந நூல்களில் சொல்லியது வாஸ்தவந்தான். அந்நூல்களின் ப்ரகாரம் விஷு திநங்கள் சித்திரை மாதம் முதல் திநத்திலும், ஐப்பசி மாதம் முதல்திநத்திலும்தான், ஏற்பட்டிருந்தன. அந்நூல்கள் அக்காலத்துள்ள ஜோதிஷ கணநப்படி விஷு திநங்களைக் கணக்கிட்டுக் கூறி

யிருக்கின்றன. 'பிருஹத்ஸம்ஹிதை' முதலான உயர்ந்த ஜோதிஷ நூல்களை வரைந்த 'வராஹமிஹிரர்' முதலான ஜோதிஷ சாஸ்திர நிபுணர்களின் காலமான கி. பி. 499-ம் வருஷத்தில் எழுதப்பட்ட நூல்களையே நாம் அநுஷ்டித்து வருவதால், அவைகளில் அக்காலத்துக் கணநப்படிச் சொல்லப்பட்ட விஷு திநங்களையே இன்றும் விஷுதிநங்களாய் நாம் கொண்டாடுகின்றோம்.

பூமத்யரேகையில் எந்தஸ்தாநத்துக்கு நேர் உச்சியில் சூரியன் ப்ரகாசிக்கின்முனே, அல்லது சூரியவீதி (Ecliptic) யும் பூமத்ய ரேகையும் எந்தஸ்தாநத்தில் சந்திக்கின்றனவோ, அந்த ஸ்தாநத்துக்குத்தான் 'க்ராந்திபதம்', அல்லது 'விஷுஸ்தாநம்' (Equinoctial Point) என்று பெயர். இந்த விஷுஸ்தாநத்து நேர் உச்சியில் சூரியன் ப்ரகாசிக்கும் திநந்தான் விஷுதிநம் என்று பெயர். மேற்கூறியபடி வராஹமிஹிரர் காலமான ஐந்தாம் நூற்றுண்டின் இறுதியில் இந்த சைத்ர விஷுஸ்தாநமானது மேஷராசி அல்லது அசுவிநீ நக்ஷத்திரத்தின் ஆதியில் இருந்ததாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆதலால் இந்த ஸ்தாநத்திற்கு 'மேஷாதி' (First Point of Aries) என்று பெயர். 36 அம்சங்கள் (Degrees) அல்லது 27 நக்ஷத்திர பாகங்கள் அல்லது 12 ராசிபாகங்களாக வகுக்கப்பட்டசூரியவீதிக்கு (Ecliptic) ராசி சக்கரம் (Zodiac) என்று பெயர். 'மேஷாதி' (First point of Aries) அல்லது சைத்ர விஷுஸ்தாநம் (Vernal Eqinoctial Point) தான் அச்சக்கரத்தின் ஆரம்பஸ்தாநம்.

இந்த விஷு ஸ்தாநமானது எப்பொழுதும் ஸ்திரமானதன்று. அதாவது சூரியவீதியும் பூமத்ய ரேகையும் எப்பொழுதும் ஒரேஇடத்தில் ஸந்திப்பதல்ல. இந்த ஸ்தாநமானது வருஷம் ஒன்றுக்குச் சுமார் 4 கலை (Seconds) வீதம் பின்னேக்கிச் செல்கின்றது. அதாவது இந்த வருஷம் விஷுஸ்தாநம் அசுவிநீயின் முதல்ஸ்தாந (Point) த்தில் இருந்தால், அடுத்த வருஷம் ரேவதியின் கடைசி நாலாவது விகலையில் அமையும். இவ்வாறு விஷு

ஸ்தானம் பின்னேக்கிச் செல்லுவதை, 'விஷு அபஸரணம்'*(Precession of the Equinox)என்று கூறுவார்கள்.இவ்விஷு அபஸரண விதியானது நமது முன்னோர்களுக்கும் தெரிந்த விஷயமாதலால், அந்தந்தக் காலங்களின் அதன் ஸ்தானங்களைக் கண்டுபிடித்து அதுமுதல் ராசிசக்ரத்தைக் கணக்கிட்டிருக்கின்றனர். இந்த விஷு ஸ்தானமானது ரிக்வேத காலங்களில் மிருகசீரிஷத்திலும், பிறகு வேதாங்கஜ்யோதிஷம் எழுதப்பட்டகாலத்தில் கிருத்திகையிலும்,பிறகு வாராஹமிஹிரர் காலத்தில் அசுவினீ நக்ஷத்திர ஆரம்பத்திலும், இருந்ததாக அந்தந்தக் காலங்களில் விளங்கிய ஜ்யோதிஷ நிபுணர்களால் கணிக்கப்பட்டிருக்கின்றது. மேஷாதியினின்றும், விஷு ஸ்தானமானது சுமார் 1400 வருஷங்களில், சுமார் 22 அம்சம் பின்னடைந்து இப்பொழுது உத்திராட்டாதி நக்ஷத்திரத்திலிருக்கின்றதெனக் கண்டுபிடித்திருக்கின்றார்கள். அதாவது மேஷாதியை முதல் அம்சமாக வைத்துக்கொள்வோமானல், இப்பொழுது 33-வது அம்சத்தில் விஷுஸ்தானமிருக்கின்றது. முன் மேஷாதியில் பூமத்திய ரேகைக்கு வரும் சூரியன் இப்பொழுது 22 அம்சங்களுக்கு முன்னதாகவே வந்துவிடுவதால், விஷு தினமும் சுமார் 22 நாட்களுக்கு முன்னதாகவே ஏற்படுகின்றது. அதாவது சுமார் 70 வருஷத்தில், விஷு தினமானது ஒருதினம் முன்னதாகவே ஏற்பட்டு வருகின்றது. இந்த விஷு அபஸரணவிதி (Law of Precession of Equinox) யின் ஸூக்ஷ்மத்தை நாம் மறந்துவிட்டோமாதலால், அதன் பிரகாரம் நமது புண்ய காலங்களையும் சரிப்படுத்திக்கொள்ள முடியாதவர்களாயிருக்கின்றோம்.

ஆர். எஸ். நாராயணஸ்வாமி அய்யர்.

---

*குறிப்பு: இந்த 'விஷு அபஸரணம்' என்பது 60 வருஷங்களில் ஒரு தினம் பின்னடைவதாகவும், அதன்கணத்தை யநுஸரித்தே பார்ஹஸ்பத்யமான 'ப்ரபவாதி' 60 வருஷங்கள் நமது முன்னோர்களால் ஏற்படுத்தப்பட்டதாகவும் தெரியவருகின்றது. இப்பொழுது சுமார் 70 வருஷங்கள் ஆகின்றனவென்றும், ராசிசக்ரம் முழுமையும் ஒருதடவை விஷுஸ்தானம் சுற்றிவரச் சுமார் 25,920 வருஷங்கள் ஆகின்றனவென்றும் தற்காலத்திய ஜ்யோதிஷ சாஸ்திரஞ்ஞர்கள் கூறுகின்றார்கள். ஆனல் நமது முன்னோர்கள் 21,600 வருஷங்களில் ஒரு அபஸரணவட்டம் ஆய்விடுமென்று கணித்திருக்கின்றனர்.

புத்தக வரவு. 197

அரும்பதவுரையுடன் வெளிவந்த ஒரு அரிய தமிழ்ப்புத்தகம்.

ஆயிரத்தெட்டு அண்டங்களை நூற்றெட்டு யுகம் அரசாண்டுவந்த சூரபன்மன் எல்லாத்தேவதைகளுக்குஞ் செய்துவந்த இடுக்கண்களை சிவபிரானுடைய ஆறு நெற்றிக்கண்களினின்றுந்தோன்றி ஆறு திருமுகங்கொண்டெழுந்தருளி ஸ்ரீ சுப்பிரமணியக் கடவுளானவர் நீக்குதற்கிடமாயிருந்த திருச்செந்தூரென்னுந் திவ்ய க்ஷேத்திரத்துக்கேற்பட்ட அநேக பிரபந்தங்களுள் திருவருள்பெற்ற மகான்களுள் அறுவராலே செய்யப்பட்ட * ஆறு பிரபந்தங்களும் மதுரைச் சங்கத்து வித்துவான் மு. ரா. அருணாசலக்கவிராயராலெழுதப்பட்ட அரும்பதவுரையுடன் திருச்செந்தூர்ப் பிரபந்தத் திரட்டெனப் பெயரிடப்பெற்று டிம்மி 8 பேஜ் சைவில் 420 பக்கமாக அச்சிடப்பெற்றன.

கந்தபுராணத்திற் சொல்லாத சூரனுடைய முற்பிறப்புக்களும் பிற கதைகளும் முகவுரைதொடங்கிப் படிப்பவர்களுக்கு நன்கு புலப்படும். இந்நூல்களும் அரும்பதவுரைகளும் மிகவும் பத்தியை விளைவிப்பதற்கும் வித்பத்தியை யுண்டுபண்ணுவதற்கும் சாதனமாயுள்ளவைகள். தமிழபிமானிகளெல்லாரும் வாங்கி வாசிக்கவேண்டியது ஆவசியகமாம்.

மேற்கூறிய ஆறு பிரபந்தங்களுடன் இராமநாதபுரம் அட்டாவதானம் வித்துவான் சரவணப்பெருமாட் கவிராயர் செய்த கந்தவருக்கச் சந்தவெண்பாவும் அரும்பதவுரையுடன் சேர்க்கப்பட்டிருக்கிறது. இந்நூல் பலதுறை நயங்களமைக்கப்பெற்றது. இப்பிரபந்தங்கள் செய்த ஆசிரியர் சரித்திரச் சுருக்கங்களும் ஆங்காங்கு எழுதப்பெற்றுள்ளன. நல்ல கலிக்கோ பைண்டுடன் தங்கக் லிவிட்டிற் பெயரிட்ட புத்தகம் க-க்கு விலை. ரூ 1—8—0. வி. பி. சார்ஜ் அணா 4.

வேண்டுவோர் மதுரை விவேகபாநுப்பிரஸ் மு. ரா. அருணாசலக்கவிராயருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

* பிரபந்தங்களாவன:—1. திருச்செந்தூர்த் தலபுராணம். 2. ஷை பிள்ளைத்தமிழ். 3. திருச்செந்தினிரோட்டகயமகவந்தாதி. 4. திருச்செந்திற் கலம்பகம். 5. திருச்செந்தூர்க் கலிவெண்பா. 6. திருச்செந்தூர்த் திருப்புகழ். 7. கந்தவருக்கச் சந்தவெண்பா.

பத்திராதிபர்.

சமாசாரம்.

பிரஹ்மஞான சபையின் முன் உதவி அக்கிராஸநாதிபதியாக (Vice-President) இருந்த ஸ்ரீமாந் ஏ. பி. ஸிந்நேட்டு என்பார் கொஞ்சகாலம் சபையினின்று விலகி இருந்தவர் திரும்பவும் அந்த ஸ்தாநத்தை வகிக்கிறதாக ஸம்மதித்திருக்கிறார். பிரஹ்மஸ்ரீ Sir எஸ். சுப்பிரமணிய அய்யர் அவர்கள், இப்போது உதவி அக்கிராஸநாதிபதியாக இருப்பதில் அந்த ராஜிநாமா செய்துபோடுவதாக ஸம்மதித்திருக்கிறார்கள்.

மதுரை, இராமநாதபுரம் ஜில்லாக்களிலுள்ள பிரஹ்மஞான கிளைச்சங்கங்களின் நான்காம் முறை கூட்டம் பரமக்குடியில் நாளிதுமீ 23, 24உ களில் கூடும்.

ஷை தேதிகளில், தஞ்சாவூர் ஜில்லாக் கிளைச்சங்கங்களின் கூட்டமும் உட்கடை என்ற கிராமத்தில் கூடும்.

மாதுஸ்ரீ அந்நிபிஸண்டு அம்மையார் இப்போது இங்கிலாண்டில் பல இடங்களில், உயர்வற உயர் நலம் அமைந்த உபந்நியாசங்கள், பிரஹ்மஞான விஷயமாகச் செய்துவருகின்றார்கள். பிரஹ்மஞான ஸபையின் பிரயோஜநத்தை ஜநங்கள் நன்றாய் அறிந்து அநேகர் ஷை ஸபையின் அங்கத்தினராக ஆகிவருகின்றார்கள். அம்மையார் அக்டோபர்மீ 10உக்குள் நம் தேசத்துக்குத் திரும்புவார்கள்.

நான்குலக்ஷம் வருஷத்திற்கு முன்னம் இருந்த சமுத்திர ஆமையின் சிலாபாவம்:—வட அமெரிக்காக் கண்டத்தில் காலிபோர்னியா என்னும் நாட்டில் லாஸ் ஆங்கிலிஸ் என்னும் பட்டணத்துக்கு அருகாண்மையிலுள்ள மலைச்சாரலில் கல்லாகச் சமைந்திருக்கின்ற கடலாமையின் சிலாபாவம் புதைந்திருந்தது சமீபத்தில் வெட்டியெடுக்கப்பெற்றது. இது குறுக்களவில் 30 அங்குலமுள்ளதாகவும், 100 (lbs.) பவுண்டு நிறையுள்ளதாகவும், இருக்கிறது. இதைக் கண்டெடுத்த இடத்தின் சமீபத்தில் சமுத்திர சம்பந்தமான பல கிளிஞ்சில்கள் கிடந்தன. இது இருந்த இடம் சமுத்திர நீர்ப்பரப்புக்குமேல் 3,000 அடி உயரமுள்ளதாகவும், இப்போது சமுத்திரம் இருக்கிற இடத்துக்கு 50 மயிலுக்கு அப்பாலுமுள்ள ஒருமலை. அமெரிக்காதேசத்தில் இதுவரையில் பூமியிலிருந்து வெட்டியெடுக்கப்பெற்ற சிலாபாவங்களில் இது மிகவும் பூர்வீகமானது. இது கண்டுபிடிக்கப்பட்ட இடமானது நான்கு லக்ஷவருஷங்களுக்கு முன்னம், ஒரு மயில் ஆழமுள்ள சமுத்திரமாக, இருந்திருக்கவேண்டுமென்று சிலாபாவ கலைஞர்கள் ஊகித்துக் கணக்கிட்டிருக்கிறார்கள். இதைக் கண்டுபிடித்தவர் டாக்டர் ஹெக்டர் அலியாட் என்பவராம்.

பத்திராதிபர்.

பூர்ணசந்திரோதய விளம்பரம்

சந்தா விவரம்.

வருஷசந்தா தபாற்கூலி உள்பட ரூ இரண்டுதான்.

தனிப்பிரதி விலை அணா 4.

விளம்பர விகிதம்.

ஒருபக்கம்	1	மாசம்	4—0—0	அரைபக்கம்	1	மாசம்	2—8—0
,,	3	,,	10—0—0	,,	3	,,	7—0—0
,,	6	,,	20—0—0	,,	6	,,	12—0—0
,,	1	வரு	36—0—0	,,	1	வரு	18—0—0

ப. நாராயண அய்யர்,

பத்திராதிபரும் மானேஜரும்.

புஸ்தகம், துண்டு பத்திரிகைகள் விளம்பம்.

பிராசீந தர்மங்களின் உயர்வும், இக்கால ஆசாரங்களும்	0-6-0
மனிதனின் வமிசாவளியின் உண்மை	0-4-0
ஹிந்துமததூஷண பரிகாரம்	0-4-0
Avvayar's Yoga aphorisms in English	0-4-0
அவதாரங்களின் உண்மை	0-8-0
ஏசுகிறீஸ்து என்பார் சரிதம்	0-0-6
தேவாலயம்	0-0-3
தர்மசத்திரங்களும் அவைகளின் சீர்திருத்த முறைகளும்	0-0-3
இந்திய புத்திரர்களின் சங்கம்	0-0-3
பிரஹ்மஞாந சபை	0-0-1
ஷை யந்திரம்	0-0-2
பிரஹ்மவித்யை	0-0-2
ஷை ஆங்கிலத்தில்	0-0-3
அஷ்டபிரதக்ஷிணம்	0-0-1
ஏசுகிறீஸ்து என்பார் ஒழுகிக்காட்டிய ஒழுக்கமுறைநூல். The Imitation of Christ (in Tamil.)	1-0-0
மௌநவாக்கு	0-2-0

மேற்கண்டவைகளுக்கு 100-க்கு 10 கமிஷன் கொடுக்கப்படும். தபாற்கூலி பிரத்தியேகம். வேண்டுவோர் அடியிற்கண்டவரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

ப. நாராயண அய்யர்,

பிரெசிடெண்டு, பிரஹ்மஞாந சபை, மதுரை.

ADVERTISEMENT.

பட்டு பீதாம்பர கம்பெனி.

திருப்தியில்லாததை திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். } ஸ்ரீ காசி. { பட்டு பீதாம்பர காட்லாக் இனாமாக அனுப்பப்படும்.

உருத்திராக்ஷங்கள்! ஜபமாலைகள்!!

பரிசுத்தமானது.

108 உள்ள மாலை 1-க்கு 6அணா முதல் ரூபா 12 வரை. விலை அதிகப்படுவதுபோல் மணிகள் சிறிதாக இருக்கும். 6முகக்கண்டிகள் 33 உள்ளது; கண்டி 1க்கு ரூபா 1முதல் 10வரை. 5 முகக்கண்டி 32 உள்ளது; கண்டி 1க்கு அணா 10முதல் ரூபா 10வரை விலை அதிகப்படுவதுபோல் மணிகள் பெரிதாகஇருக்கும். சம்மதமில்லாதவை திரும்பப் பெற்றுக்கொள்ளப்படும்.

மடிதாவளிகள் வைதீகர்களுக்கு.

5 முழம் 1க்கு ரூபா	0 14 0	9 முழம் 1க்கு ரூபா	2	0	0
6 ஷை	1 4 0	10 ஷை	2	8	0
7 ஷை	1 8 0	12 ஷை	3	8	0
8 ஷை	1 12 0	15 ஷை	4	8	0

தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

பனி! பனி!! பனி!!!

பனிக்கு அடக்கமான சுத்தமான கம்பளி ரோமத்தால் செய்த உடுதியும், கைலாசம், நேர்த்தியுமான கம்பளிப்போர்வைகள். 6முழம் நீளம் 3 முழ அகலம். சிவப்புமுதலிய சகல நிறத்திலும் தயாராக இருக்கின்றன. உடுப்படி 1-க்கு ரூபா 5—0—0. தபால்செலவு பிரத்தியேகம்.

காசி வயிரவர் கயிறு.

முதல் நெம்பர் 100-க்கு	...	...	3	0	0
2-வது நெம்பர் 100-க்கு	...	...	2	8	0
3-வது நெம்பர் 100-க்கு	...	...	0	6	0

குழந்தைகள்!

குழந்தைகள்விளையாடக்கூடிய பித்தளை வெண்கலத்தால் செய்த செம்பு, குடம் காண்டிமுதல் 32 சாமான்கள் அடங்கிய அழகும் நேர்த்தியும் நைசும் பளபளப்புமுள்ள அழகிய பாத்திரங்கள் 32 உள்ள சிறு செட்டு 1-க்கு ரூபா 2. பெரிய செட்டு 1-க்கு ரூபா 4.

உடனே எழுதுங்கள்.

விலாசம்: மானேஜர்,

பட்டு பீதாம்பர கம்பெனி,

காசி, Benares City.